Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு +II
விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 மாசி 19 ஹிஜ்ரி 1426 ஸபர் 02 (03.03.2006) வெள்ளிக்கிழமை இதழ் 153

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்

# தலைமைப் பதவிக்கு சுவீடன்; ஹெல உறுமய கடும் எதிர்ப்பு!

கொழும்பு —

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமைப்பதவி சுவீடன் நாட்டுக்கு வழங்கப்பட்டதற்கு ஜாதிக ஹெல உறுமய கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் நோர்வேயின் வசம் இருந்த போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவி - ஜெனிவாப் பேச்சுக்களுக்கு முன்னர் சுவீடனிடம் கையளிக்கப்பட்டது.

சுவீடன் நாட்டவரான பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்ரிக்சன் ஏப்ரல் மாதம் கண்காணிப்புக் குழுவின் தலைவராக பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையிலேயே ஜாதிகஹெல உறுமய இந்த நியமனத்துக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஜாதிகஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் :-

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு பயணத்தடை விதித்துள்ள நிலையில்- ஐரோப்பிய ஒன்றிய நாடான சுவீடனுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பயணத் தடையை நீக்கிக்கொள்ளும் நோக்கிலேயே நோர்வே அரசாங்கம் இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா பேச்சுக்கள்: இந்தியா மகிழ்ச்சி

புதுடெல்கி —

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாக இந்தியா மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவதேஜ் சர்ணா நேற்று முன்தினம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## 1000 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்தார் முரளி



சிட்டகொங் —

பங்களாதேஷ் அணிக்கு எதிராக சிட்டகொங்கில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் - இலங்கை அணி வீரர் முத்தையா முரளிதரன், டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆயிரம் விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையைப் படைத்தார்.

தனது நூறாவது டெஸ்ட் போட்டியிலேயே (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக

# இறுதியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் 8 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கல்வி கற்பதற்கான இயல்புநிலை ஏற்படாத நிலையில் - இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சையை கருத்தில்கொண்டு அவர்களுக்கான விரிவுரைகள் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் எதிர்வரும் புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும்.

எனினும், பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தினரின் பிரசன்னமின்றி இயல்புநிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர் ஏனைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த இரண்டரை மாதங்களாக யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டிருந்த இராணுவத்தினரின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதியுடனான சந்திப்பில்

## பாதகமான அரசியல் சூழ்நிலையை

# இராணுவத் தளபதியுடனான சந்திப்பில் புத்தகம் கேட்ட கல்விப் பணிப்பாளர்கள்!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டு மாணவர்களின் இயல்பான கற்றலுக்கு, படையினரின் நடவடிக்கைகள் இடையூறாக இருந்து வருகின்ற நிலையில்- யாழ். படைகளின் தளபதியைச் சந்தித்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இது குறித்து மௌனம் சாதித்ததாகத் தெரியவருகிறது.

அத்துடன், படைத்தளபதிகளுடன் எதுவித தொடர்பும் இல்லாத இலவசப் பாட புத்தக விநியோக குறைபாடுகள் குறித்தே இவர்கள் முறைப்பாடு செய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வித் திணைக்கள அதிகாரிகளுடனான உயர் மட்ட மாநாடு நேற்றுக் காலை 11 மணியளவில் காங்கேசன்துறையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி -

யாழ்.குடாநாட்டு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை எந்தவொரு அரசியல் நடவடிக்கைக்கும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ்.குடாநாட்டு மாணவர்கள் அரசியல் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதால் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்பட அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் - உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் பாடசாலைகள் அமைந்துள்ளதால் மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதகமான அரசியல் சூழ்நிலையை புலிகள் ஜெனிவாவில் சாதகமாக்கினர்

## புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன்



கிளிநொச்சி —

பாதகமான அரசியல் சூழலை விடுதலைப் புலிகள் ஜெனிவாவில் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டனர் என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில நேற்று இடம்பெற்ற ஊரக வளர்ச்சி மேம்பாட்டுப் பேரவை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

மிகவும் மோசமான அரசியல் சூழல் ஜெனிவாவில் இருந்தது. விடுதலைப் புலிகள் அந்த அரங்கத்துக்குச் சென்று தமக்குச் சாதகமாக அரசியல் சூழலை மாற்றினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பாதகமான அரசியல் சூழலை எவ்வாறு எமக்குச் சாதகமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தர பரீட்சையை ஒரு மாதம் பிற்போடுமாறு வேண்டுகோள்!

கொழும்பு —

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவிருக்கும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைகளை பிற்போடுமாறு பரீட்சை ஆணையாளர், கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் 28ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க கடிதம் மூலமாக நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கடந்த வருட உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கு மேலதிக காலம் செலவிடப்பட்டது. அதனால் அந்தக் காலத்தை மீண்டும் மாணவர்களுக்கு வழங்குவ (12 ஆம் பக்கம் பார்க்க)

### இன்றைய இதழில்

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொருளியல் II, பொதுச் சாதாரணப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....
EXPOAIR
021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email:jaffna@expoavi.com, reservations@expoavi.com.
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமானசேவை...

# பறவைக் காய்ச்சல் அச்சமின்றி கோழி உணவுகளை உண்ணலாம்

## பிராந்திய உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

பறவைக் காய்ச்சல் அச்சமின்றி கோழி இறைச்சி, முட்டை ஆகியவற்றை மக்கள் உட்கொள்ள முடியும் என கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் டொக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் பறவைக்காய்ச்சல் தொடர்பான விடயம் மிகவும் அச்சம் தரும் ஒன்றாக காணப்படுகிறது. இதனால் இந்த விடயமானது முட்டை, கோழி இறைச்சி போன்ற உணவு வகைகளின் சந்தைப்படுத்தலில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இதுவரையில் பறவைக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டதற்கான அறிகுறிகள் எவையும் கண்டு பிடிக்கப்படாத நிலையில் மக்கள் எதுவித அச்சமுமின்றி கோழி உணவு வகைகளை உட்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் —

யாழ்பாணப் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை விவசாயபீடத்தில் ஒன்று கூடுமாறு விவசாயபீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் விவசாய பீட மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு விவசாய பீட மாணவர் ஒன்றிய செயலாளர் தெரிவித்தார். (அ)

## கலந்துரையாடல் திகதி மாற்றம்

யாழ்ப்பாணம் —

சாம்ரெக் நிறுவன பணியாளர்களுக்கு பளை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெற இருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெறவுள்ளதாக சர்வதேச மாணவர் பேரவை அறிவித்துள்ளது.

## மெய்வல்லுநர் போட்டிகள்

கோப்பாய் —

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் நா.சண்முகரத்தினம் பிரதம விருந்தினராகவும், கோப்பாய்க் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

★ ★ ★

வடமராட்சி —

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.சிதம்பரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் மன்னார் அரச அதிபர் வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

## மகோற்சவம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு மேற்கு கரமந்தை கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை முதல் கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து இரதோற்சவமும், தீர்த்தோற்சவமும் இறுதியாக கொடியிறக்கமும் இடம்பெறும். தினமும் காலை 9 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி இரவு உற்சவம் நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் முடிவுறும். திருவிழா காலத்தில் ஆலயச் சுழலில் வீடியோ படக்காட்சி முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர். (113)

## வர்த்தக வங்கியின் சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம் —

வாத்தக வங்கியில் நாளை மறுதினம் நடைமுறைகளுக்கு வரும் வகையில் சனிக்கிழமைகளில் காலை 9மணி முதல் பிற்பகல்1.30மணி வரை வங்கிச் சேவை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கண்டி, காலி நகரம், மொரட்டுவ, நுகேகொட, வெள்ளவத்தை, லீட்அவனியூ, புறக்கோட்டை பிரதான வீதி ஆகிய வீதிகள் இந்த நேர ஒழுங்கில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சடலத்தைப் பொறுப்பேற்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 6 ஆம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

ஸ்கந்தபுரம் மணியங்குளத்தைச் சேர்ந்த பி.அல்லிமுத்து (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலத்தை உறவினர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## விளையாட்டு அணிகளிடையே மோதல்; வெற்றியீட்டிய அணித் தலைவர் காயம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.வலய பாடசாலைகளிடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய அணியினரை மற்றைய அணியினர் தாக்கிய சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவனான மகேஸ் துஷ்யந்தன் (வயது17) என்பவரே காயமடைந்தவராவார்.

செங்குந்தா கல்லூரிக்கும் ஸ்ரான்லி கல்லூரிக்கும் இடையே நேற்று முன்தினம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் செங்குந்தா அணி வெற்றியீட்டியது.

இதனால் ஆத்திரமடைந்த மற்றைய அணியினர் வெற்றியீட்டிய அணியின் தலைவரை தாக்கியதில் அவர் தலையில் காயமடைந்தார். காயமடைந்த மர்ணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (நி)

## மருத்துவ முகாமும் கண்பரிசோதனையும்

யாழ்ப்பாணம் —

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பான சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பிரதேச லயன்ஸ் கழகத்தால் இலவச மருத்துவ முகாம் ஒன்று பாசையூர் புனித அந்தோனியார் கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். இதில் வைத்திய நிபுணர்கள் பவானி, சிவச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு மகப்பேறு, நீரிழிவு, இரத்த அழுத்தம், குருதி அமுக்கம் போன்றவற்றுக்கான இலவச பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ். துஷா ஒப்டிக்கல் நிறுவனத்தின் அனுசரணையில் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் நிரிழிவு, இரத்த அழுத்தம், பொதுச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் இடம்பெறுவுள்ளன. இந்த நிகழ்வு யாழ்.லயன்ஸ் கழகத் தலைவர் றஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## தையல், மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற தையல் பயிற்சி நிலைய மாணவர்களது தையல், மனையியல் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட உதவிஅரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த வே.வீரபத்திரபிள்ளை பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (113)





மனோகரா - யாழ்ப்பாணம்
இன்றுமட்டும் -
ஜெயம் ரவி, கம்னா, பிரகாஷ்ராஜ் நடித்த
இதயத்திருடன்
காட்சி:10.30, 1.30, (பு.நே)
இன்றுமுதல்
புரட்சிக் கலைஞர் விஜயகாந், சுஷிமா மற்றும் பலர் நடித்த
சுதேசி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
காட்சி: 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.30








## 75ஆவது பிறந்ததின நல்வாழ்த்துக்கள்



**01.03.1932**

**தாவீதுப்பிள்ளை அருளானந்தம்**

(இளைப்பாறிய அதிபர், கட்டைக்காடு, முள்ளியான்)

அருள் என்ற பெயர் மீது கவிபாடும்
ஊர் மீது இவர் பெயர் கேட்டு நீ - பாடு
பவள விழாக்காணும் பவளத்தை நீ - போற்று
பொக்குள் கொடி முதல் அரைஞாண் கொடியு' ன்
தாலிக் கொடிவரை எமக்குத் தந்த - ஆண்டர்
அன்பிற்கன்றி எதற்கும் அடிமையாகாதவர்
பண்பிற்குப் பாடம் புகட்டியவர் - பரமனின்
பாதையை பற்றிட வைத்தவர் - இவர்
வீரமும் ஈரமும் ஒருங்கே பூண்டவர் - சில
வீரர்கள் கதைகளில் கலந்து வாழ்பவர் - இன்று
விழுதுகள் தாங்கி விருட்சமாய் உள்ளவர்
வாழ்க வாழ்க வளமுடன் நிமிர்க!

என வாழ்த்தும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[4448]



# அறிவித்தல்

**2005 சனாதிபதித் தேர்தலின் பின்பு யாழ். தீபகற்பத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழு**

ஸ்ரீ லங்கா சனநாயக சோஷலிசக் குடியரசின் அதியுத்தம சனாதிபதி திரு.மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால், ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு.தர்மசிரி ஜயவிக்கிரம அவர்களை மேற்குறித்த ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், தலைவராகவும், சட்டத்தரணி ஜனாப்.ஏ.ஜே.யூசுப் அவர்களை ஏனைய உறுப்பினராகவும் கொண்ட ஒரு குழுவை பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளபடியால் அக்குழு, பொது மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றது.

அ) 2005 நவம்பர் 17 ஆந் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர் அதாவது 2005 நவம்பர் 18ஆந் திகதிக்கும் 2006 சனவரி 31ஆந் திகதிக்கும் இடைப்பட்ட காலத்துள், யாழ் தீபகற்பத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும், சமாதானத்தையும், நிலைநாட்டிச் செல்வதில் அனர்த்தத்தை ஏற்படுத்திய நிகழ்வுகள் எவை என்றும்,

ஆ) அந்த நிகழ்வுகளுக்குப் பொறுப்பாளிகள் யார் என்றும்,

இ) அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்த்துக் கொள்ளுவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்

இவை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு விருப்பங் கொண்ட நபர்கள் அல்லது அமைப்புக்கள் அத்தகவல்களை எழுத்துருவில், குழுவுக்கு 2006.03.16 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்து ஒத்துழைப்பு வழங்கலாம்.

மேற்படி விடயங்கள் தொடர்பான தகவல்களை இரகசியமாக வழங்க வேண்டும் என்று எவரேனும் எதிர்பார்ப்பதாயின் அதைப்பற்றி குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இக்குழுவிற்கு அனுப்பும் சகல கடிதங்களும் ஆவணங்களும் கீழே கையொப்பம் இடுகின்ற உத்தியோகத்தருக்கு அனுப்ப வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

குழுவின் ஆணைப்படி
ஆர்.எம்.ஏ.பீ.ரத்நாயக்க
குழுவின் செயலாளர்,
அரச எழுதுநர் சேவைச் சங்க கட்டிடம் (03 ஆம் மாடி)
இல. 90, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த,
கொழும்பு - 02
2006 மார்ச் 03 ஆந் திகதி

C/5128

# ஜெனிவா பேச்சு முடிவுகளை அமுல்படுத்தி 2 ஆம் கட்ட பேச்சை ஆரம்பிக்கவேண்டும்!

## ஜயந்த தனபால தெரிவிப்பு



கொழும்பு—

வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

இவ்வாறு முன்னாள் சமாதான செயலகப் பணிப்பாளரும், சமாதான பேச்சுவார்த்தைகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சிரேஷ்ட ஆலோசகராகச் செயற்பட்டவரும், ஐ.நா செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளருமான ஜயந்த தனபால தெரிவித்தார்.

கொழும்பில் வெளிவிவகார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜயந்த தனபாலவின் பிரத்தியேக இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு பேசுகையில்:-

தமிழீழ விடுதலைப்புலிகளும் - இலங்கை அரசாங்கமும் ஜெனிவாவில் நடத்திய முதலாம்கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட முடிவுகளை முறையாக அமுல்படுத்தி இரண்டாம் கட்டப் பேச்சுக்களையும் வெற்றிகரமானதாக மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான பொறுப்பு இரு தரப்புக்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

இலங்கையில் நிலவிவரும் பிரச்சினைகளை சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க முடியும். அரசின் தற்போதைய நிலைப்பாடும் சரியானதொன்றாகவே அமைந்துள்ளது.

ஐ.நா.சபையின்கீழ் இயங்கும் பல்வேறு தொண்டர் அமைப்புக்களும் இலங்கையில் தமது மனிதாபிமானப் பணிகள் பலவற்றையும் மேற்கொண்டு வருகின்றன.

ஆயினும் இவ்வாறான ஒரு உள்நாட்டுப் பிரச்சினையின்போது ஐ.நா. சபையானது நேரடியாக இந்தப் பிரச்சினைகளில் அரசியல் ரீதியாகத் தலையிடமுடியாது. இது இலங்கை என்றில்லை. வேறு எந்த நாட்டிலாயினும் அந்த நாடு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கும் பட்சத்தில் மாத்திரமே ஐ.நா.சபை இவ்வாறான உள்நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பாகத் தமது பணிகள் பற்றி ஆராயும்.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகமாகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் வளர்முக நாடொன்றின் பிரதிநிதி என்ற வகையில் மிலேனியம் ஆண்டில் வளர்முக நாடுகளின் அபிவிருத்தி இலக்குகள் என ஐ.நாவால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை இலங்கை அடைவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்றும் உறுதியளித்தார்.

# ஹட்டனில் வெடிபொருட்களுடன் மூன்று இளைஞர்கள் கைது

கொழும்பு—

ஹற்றன் சிங்க மலைப்பகுதியில் வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்ட மூன்று பேரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிவான் பிரதீப் ஜெயதிலக உத்தரவிட்டார்.

ஹற்றன் சிங்கமலை ரயில் குகையின் ஊடாக சென்ற ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபோது - அவரிடம் இருந்து சக்திவாய்ந்த வெடி மருந்துகளைக் கைப்பற்றினர்.

இவரிடம் இருந்து கைப்பற்றிய வெடிமருந்தை பரீட்சித்த நுவரெலிய இராணுவத்தினர் இவை சக்தி வாய்ந்த வெடிபொருள் என இனம் கண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஆரம்ப விசாரணையின்மூலம் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட வெடி பொருட்கள் இரசாயன பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டன. (01)

# ஜெலிக்னைட் குச்சிகள் குருநாகலில் கண்டுபிடிப்பு

கொழும்பு—

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுக்களை தேடி கடையொன்றை சோதனையிட்ட குருநாகல் கலால் திணைக்கள அதிகாரிகள் 168 ஜெலிக்னைட் குச்சிகளை கைப்பற்றினர்.

ஒரு பார்சலில் 56 ஜெலிக்னைட் குச்சிகள் வீதம் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பார்சல்களை மீட்டனர்.

ஜெலிக்னைட் குச்சிகள் மற்றும் சட்டவிரோத சிகரெட்டுடன் கடை உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, குண்டு வெடிக்க பயன்படுத்தப்படும் ஜெலிக்னைட் குச்சிகள் பெருமளவில் குருநாகலில் மீட்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும். நாரம்மலையைச் சேர்ந்த இந்த சந்தேகநபர் இந்த ஜெலிக்னைட் குச்சிகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்புவதற்கு வைத்திருந்திருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

அடிக்கடி தனது கடைக்கு வரும் நபரொருவர் இந்த பார்சல்களை பின்னர் எடுப்பதாகக் கூறி வைத்துவிட்டுச்சென்றதாகவும் அவை வெடி பொருட்கள் என தான் அறிந்திருக்கவில்லை என்றும் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## சர்வகட்சி மாநாட்டில்

# ஜே.வி.பி - ஹெல உறுமய கட்சிகள் விசேட அறிக்கை வெளியிடவுள்ளன!

கொழும்பு—

போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கத்துக்கும் -விடுதலைப்புலிகளுக்குமிடையே ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியன 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் விசேட அறிக்கைகளை வெளியிடவுள்ளன.

அத்துடன் எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளின்போது எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்த இரண்டு கட்சிகளும் சர்வகட்சி மாநாட்டில் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கவுள்ளன.

ஜெனிவாவில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது குறித்த இணக்கப்பாட்டை ஏற்படுத்தியதை ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொள்ளாததுடன், அதனை கடுமையாக எதிர்த்து வருகின்ற நிலையில் - இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் இதற்கு 2 கட்சிகளும் தமது அறிக்கைகளை வெளியிடத் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் பேச்சுவார்த்தையை சரியானமுறையில் கொண்டு செல்வதற்கும், பிழைகளைத் திருத்துவதற்கும். அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் அதனுடன் தொடர்புடைய ஆலோசனைகளை இரண்டு கட்சிகளும் முன்வைக்குமென அந்தக் கட்சிகளின் தகவல்கள் தெரிவித்தன.

ஜே.வி.பியின் சார்பில் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும், ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் அதன் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரரும், தமது கட்சிகளின் அறிக்கைகளை வெளியிடவுள்ளனர். (தே)

# 78 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்துவதில் சிக்கல்!

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் நிலவுகின்ற அசாதாரண சூழல் காரணமாக இந்தப் பகுதிகளிலுள்ள 78 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்துவது குறித்து சிக்கலான நிலை தோன்றியுள்ளதாகத் தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பொலிஸார் செல்வது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் - தேர்தலை நடத்துவதற்கு அரச அதிகாரிகள் அந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியாததாலும் இந்தச்சிக்கல் தோன்றியுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு இதே போன்ற நிலைமையால் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவில்லை.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின்போது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிமக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக இராணுவ முன்னரங்க நிலைகளுக்கு அருகில் வசதிகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது கடினமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்துவதற்கு தடையாக உள்ள பிரச்சனைகள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளர் அந்தப் பகுதிகளின் படை அதிகாரிகள், அரச அதிபர்களுடன் விரைவில் கலந்துரையாடலை நடத்தவுள்ளார். (தே)

# பல்கலைக்கழக அனுமதிக்கு மீள விண்ணப்பம் கோர முடிவு

கொழும்பு—

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் குறித்து இரண்டாவது தடவையாக மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக மீளவும் விண்ணப்பங்களைக் கோருவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இரசாயன விஞ்ஞான பாடங்களில் விடைத்தாள்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், இசற் ஸ்கோர் புள்ளிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் இரண்டாவது தடவையும் விண்ணப்பங்களைக் கோருவதற்குத் தீர்மானித்ததாகமானியங்கள்ஆணைக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

விடைத்தாள்கள் மீளாய்வுசெய்த பின்னர் இசற் ஸ்கோர் புள்ளிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு - உதாரணமாக பல் மருத்துவபீடத்துக்குத் தெரிவான மாணவரொருவனுக்கு மீளாய்வு செய்யப்பட்ட பின்னர், கூடுதலான இசற் ஸ்கோரைப் பெற்றிருந்தால் அவருக்கு மருத்துவபீடத்திற்கு செல்வதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்படவேண்டும்

விடைத்தாள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் இசற் ஸ்கோர் மாறிய மாணவர்களுக்கு பொருத்தமான துறைகளில் கற்பதற்காக மீளவும் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (தே)

# முஸ்லிம் கட்சிகளை பேரியல் சந்திக்கிறார்



கொழும்பு—

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியான அமைச்சர் பேரியல் அஷ்ரப் - முஸ்லிம் தலைவர்களுக்கான கூட்டமொன்றை இந்த வாரம் கொழும்பில் கூட்டுவற்குத் திட்டமிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின்போது முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது மற்றும் தனித் தரப்புக் குழுவொன்றை எதிர்காலப் பேச்சுக்களுக்கு அனுப்புவது உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய நடவடிக்கைச் செயலணி ஒன்றை அமைப்பது குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 22 ஆம் 23 ஆம் திகதிகளில் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுக்களில் அரச தரப்புக் குழுவின் பிரதிநிதிகளில் ஒருவராக அமைச்சர் பேரியல் அஷ்ரப் கலந்துகொண்டிருந்தார்.

தற்போது மலேசியா சென்றுள்ள இவர் நாடு திரும்பியதும் இந்தக் கூட்டத்துக்கான திகதி தீர்மானிக்கப்படும்.

# கட்சி விதிகளை மீறியதாக சந்திரிகா குற்றச்சாட்டு!

கொழும்பு—

கட்சியின் எந்தவொரு கூட்டத்துக்கும் தலைவரின் அனுமதியுடனேயே அழைப்பு விடுக்கவேண்டும். ஆனால், கட்சி தலைவியான தனது எவ்வித அங்கீகாரமும் இன்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான மாநாடு மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளருக்கான விசேட கூட்டத்துக்கு அழைப்பு விடுத்ததன்மூலம் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருவரும் கட்சியின் யாப்பு விதிகளை மீறியுள்ளதாக சுதந்திரக் கட்சியின் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா கட்சி செயலாளருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவியான சந்திரிகாவின் கையொப்பத்துடன்கூடிய கடிதம் நேற்றுமுன்தினம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மூன்று பக்கங்களடங்கிய இந்தக் கடிதம் ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தே)

# மாவட்ட செயலாளர்களைக் கொழும்புக்கு அழைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது!

## ஜனாதிபதி மகிந்த உத்தரவு



கொழும்பு—

மாவட்ட செயலாளர்களின் மாநாடு அல்லது தனது அழைப்பைத் தவிர வேறு எந்தக் காரணங்களுக்காகவும், அவர்களை கொழும்புக்கு அமைச்சர்கள் அழைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி அலரிமாளிகையில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் விழாக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தொலைவிலுள்ள மாகாணங்களின் மாவட்டச் செயலாளர்களை கொழும்புக்கு அழைப்பதனால் அவர்கள் பொதுமக்களுக்குரிய சேவைகளைச் செய்து முடிக்க முடியாமலுள்ளனர். மாவட்டச் செயலாளர்களுடன் நான் தொலைபேசி மூலமே உரையாட எண்ணியுள்ளேன். இதனை அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் செய்யலாமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# ஒரு லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை!

கொழும்பு—

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் பணிகளுக்காக ஒரு லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களை பணியில் அமர்த்தவுள்ளதாகத தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அரச நிறுவனங்களின் அனைத்து பொறுப்பதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளதாக - தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வாகனங்களை தனியாரிடமிருந்து வாடகைக்குப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணிகளுக்கா 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் பிரசாரம் செய்வதற்குத் தடை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுளளதாகத் தேர்தல் திணைக்களத்தின் மற்றொரு அதிகாரி தெரிவித்தார். ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின்போதே வானொலி மற்றும் தொலைக்கட்சிகளில் பிரசாரம் செய்வதற்கு அனுமதி உண்டெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# தமிழக மக்கள் ஆதரவு யாருக்கு?

# தேர்தல் முடிந்த பின்னரே தெரியும்!

சென்னை—

அண்மைக்காலத்தில் முதன்முறையாக பெரிய கட்சிகளின் கூட்டணியில்லாமல் சட்ட சபைத் தேர்தலில் அ.தி.மு.க. இப்போது தனியாகப் போட்டியிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

மக்கள் கூட்டணிதான் எனக்கு நிரந்தரமான அரசியல் கூட்டணி, வல்லமைபெற்ற அந்தக் கூட்டணி என்னுடன் இருக்கும்போது இந்த மண்ணில் எந்தச் சக்தியாலும் என்னை வெல்ல முடியாது என்று அண்மையில் முதல்வர் ஜெயலிதா பேசினார்.

பா.ம.கவுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் திடீரென அ.தி.மு.க. அணியில் சேர்ந்தார்.

தி.மு.க. அணியில் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், ம. தி. மு. க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் உள்ளன.

அ.தி.மு.க. அணிக்குச் செல்லமாட்டோம் என்று பல மாதங்களாகவே பா.ம.க. உறுதியாகக் கூறிவந்தது. இந்த நிலையில் ம.தி.மு.கவை தங்கள் பக்கம் இழுக்க அ.தி.மு.க. மேற்கொண்ட முயற்சியும் நிறைவேறவில்லை.

பொதுவாகவே தமிழகத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் குறிப்பிட்ட சதவீத வாக்குகள் உள்ளன. அ.தி.மு.க., தி.மு.க. ஆகியன பெரிய கட்சிகளாக இருந்தபோதிலும், காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் எந்த அணியில் இருக்கிறதோ அந்த அணி வெற்றிபெற வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் பெரிய கட்சிகளின் கூட்டணி இன்றி சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்கவிருக்கிறது அ.தி.மு.க. காங்கிரஸிலிருந்து பிரிந்து திண்டிவனம் ராமமூர்த்தி தொடங்கியுள்ள தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை அ.தி.மு.க. அணிக்கு வந்துள்ள போதிலும் தமிழகம் முழுவதும் இந்தக் கட்சிகளுக்கு செல்வாக்கு இருப்பதாகக் கூறமுடியாது.

சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி ஜெயேந்திரரைக் கைது செய்ததால், ஜெயலலிதாவுடன் அணி சேரக்கூடாது என்று பா.ஜ.கவினர் கூறி வருகின்றனர். தனியாகப் போட்டியிடப் போவதாகவும் பா.ஜ.க. அறிவித்துள்ளது.

நடிகர் விஜயகாந்த் கட்சிக்கு மக்களிடையே எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்று தேர்தலில் அவரது கட்சிக்குக் கிடைக்கும் வாக்குகளைப் பொறுத்தே சொல்ல முடியும். இதுவரை எந்த அணியுடனும் சேராமல் இருக்கிறார் விஜயகாந்த். அவர் தனியாகப் போட்டியிட்டால் அவரது உண்மையான பலம் தேர்தல் முடிவில் தெரியவரும்.

அ.தி.மு.கவின் 5 ஆண்டுகால சாதனைகளை மையமாக வைத்து தீவிரமாகப் பிரசாரம் செய்தால்தான் கணிசமான வாக்குகளைப் பெற்று தி.மு.க. கூட்டணியைச் சமாளிக்க முடியும்.

மணல் குவாரிகளையும், மதுக் கடைகளையும் அரசுடமையாக்கி அரசின் நிதி நிலைமையைச் சீராக்கியது. அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையைத் தடைசெய்து, அதனால் அழிந்த பல குடும்பங்களைக் காத்தது. மின் கட்டணம் குறைப்பு, அரசுப் பாடசாலை மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கியமை, நிவாரண அரிசி விலைகளை உயர்த்தாதது எனப் பல்வேறு சாதனைகளையும் அ.தி.மு.கவினர் தீவிரமாகப் பிர சாரம் செய்வர்.

சுனாமி அனர்த்தப் பாதிப்பு ஏற்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகளும் பிரசாரத்தில் இடம்பெறும்.

தேர்தல் நடைபெறும் நேரம் கோடை காலம் என்ற போதிலும், பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்து ஏரி, குளங்கள், அணைகள் நிறைந்திருப்பதால் தண்ணீர் பிரச்சினை இருக்காது. எனவே, இந்த முறை தேர்தலைச் சந்திக்கும்போது குடிநீர் பிரச்சினை முக்கிய இடம் பெறாது.

ஆனால், பெரும் மழை காரணமாக ஆங்காங்கே பாலங்கள், வீதிகள் சேதம் அடைந்துள்ளன. சேதமான வீதிகளைச் சீரமைக்க வேண்டும். உடைந்த பாலங்களை மீண்டும் கட்ட வேண்டும்.

வெள்ள நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதே பல மாவட்டங்களில் முக்கியமான பிரச்சினையாக இருக்கும். இந்தப் பிரச்சினையை எதிர்க் கட்சியினர் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு தேர்தலின்போது பிரசாரம் செய்வர்.

அரசு செய்த நன்மைகளும், நன்மைகள் என நினைத்துச் செய்தவற்றில் ஏற்பட்ட சில தவறுகளும் மக்களால் இப்போது பேசப்படுகிறது.

இரு தரப்புமே மக்கள் தங்கள் பக்கம் என்று சொன்னாலும், மக்கள் கூட்டணி யாருக்கு என்பதை அறிய தேர்தல் முடியும்வரை காத்திருக்க வேண்டும்.

# தமிழக சட்டசபைத் தேர்தல் மே 8 ஆம் திகதி நடைபெறும்

சென்னை—

234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்டசபையின் பதவிக்காலம் எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

எனவே, அதற்கு முன்னதாக தமிழக சட்டசபைத்தேர்தலை நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் செய்து வருகிறது. இது தொடர்பாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தமிழ்நாட்டுக்கு வந்து ஆலோசனை நடத்திவிட்டுச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து, தலைமை தேர்தல் ஆணையாளர் பி.பி தாண்டன் நேற்று முன்தினம் தமிழக சட்டசபைத் தேர்தல் திகதியை அறிவித்து தேர்தல் அட்டவணையையும் வெளியிட்டார்.

அதன்படி, தமிழக சட்டசபைக்கு எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறும்.

இதற்கான தேர்தல் அறிவிப்பு ஏப்ரல் 13 ஆம் திகதி வெளியிடப்படும். அன்றைய தினமே வேட்புமனுத் தாக்கல் தொடங்கும்.

வேட்புமனுத் தாக்கல் செய்ய 20 ஆம் திகதி கடைசி நாள். மறுநாள் அதாவது ஏப்ரல் 21 ஆம் திகதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும். போட்டியிலிருந்து விலக விரும்புவோர் தங்கள் மனுக்களை வாபஸ்பெற ஏப்ரல் 24 ஆம் திகதி கடைசிநாளாகும்.

மே மாதம் 8 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும். மே 11 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் மே 20 ஆம் திகதிக்குள் முடிவுக்கு வரும்.

தமிழக சட்டசபைத் தேர்தலுடன் 30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி மாநில சட்டசபைக்குத் தேர்தல் நடத்தப்படுகிறது.

அங்கு இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும். முதல் கட்டமாக கேரளா மற்றும் ஆந்திர மாநில பகுதிகளில் அமைந்துள்ள மூன்று தொகுதிகளில் மே 3 ஆம் திகதியும், மீதமுள்ள 27 தொகுதிகளில் மே 8 ஆம் திகதியும் வாக்குப் பதிவு நடைபெறும்.

முதல்கட்டத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஏப்ரல் 5 ஆம் திகதி தொடங்குகிறது. மனுத்தாக்கல் செய்ய வேண்டிய கடைசி நாள் ஏப்ரல் 12 ஆம் திகதியாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 13 ஆம் திகதி நடைபெறும். போட்டியிலிருந்து விலகவிரும்புவோர் மனுக்களை வாபஸ்பெற ஏப்ரல் 15 ஆம் திகதி கடைசி நாள். மே 3 ஆம் திகதி இந்த 3 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறும்.

2 ஆவது கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற இருக்கும் 27 தொகுதிகளிலும் வேட்புமனுத்தாக்கல் ஏப்ரல் 13 ஆம் திகதி தொடங்குகிறது. மனுத்தாக்கல் செய்ய வேண்டிய கடைசி நாள்ஏப்ரல் 20 ஆம் திகதி .

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெறும். மனுக்களை வாபஸ் பெற ஏப்ரல் 24 ஆம் திகதி கடைசி நாள் ஆகும். மே 8 ஆம் திகதி 27 தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடைபெறும்.

அனைத்து தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் மே 8 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

சட்டசபைத்தேர்தலுக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் நேற்று மாலை முதல் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமுலுக்கு வந்தன.

## தமிழகத் தேர்தல் பிரசாரத்துக்கு சோனியா, ராகுல், பிரியங்கா!



சென்னை—

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் போட்டியிடுகிறது. காங்கிரஸுக்கு தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. தொகுதி மற்றும் வேட்பாளர் பட்டியல் விபரங்களை காங்கிரஸ் மேலிடம் வெளியிடவுள்ளது.

இதற்கிடையில் நாளை மறுதினம் திருச்சியில் நடைபெறும் தி.மு.க. மாநாட்டில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கலந்துகொண்டு தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் கூட்டணித் தலைவர்களுடன் ஒரே மேடையில் உரையாற்றுவார்.


தொகுதிப் பங்கீடு வெளியானதும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் செய்வார். அவர் முக்கிய ஊர்களில் மட்டும் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசத் திட்டமிட்டிருக்கிறார்.

அடுத்ததாக காங்கிரஸாரிடையே பிரசாரத்தை முடுக்கிவிடவும், இளைஞர்களை காங்கிரஸ் பக்கம் இழுக்கவும் ராகுல் காந்தி, பிரியங்கா ஆகியோரையும் தமிழ்நாட்டில் பிரசாரக் களத்தில் இறக்கிவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அவர்கள் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு முக்கிய தொகுதிகளில் பிரசாரம் செய்யவுள்ளனர். ராகுல் - பிரியங்கா சுற்றுப் பயணத்திட்டத்தை காங்கிரஸார் தயாரித்து வருகிறார்கள்.




## தி.மு.கவின் பொதுக்குழு மாநாடு திருச்சியில் இன்று ஆரம்பம்!



திருச்சி—

தமிழக சட்டசபைக்கு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பரபரப்பான சூழ்நிலையில் திருச்சியில் இன்று தி.மு.கவின் 9 ஆவது மாநாடு தொடங்கவுள்ளது.

இந்த மாநாடு 5 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், மாநிலம் முழுவதும் இருந்து பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உட்பட 2 ஆயிரம் பேர் கலந்து கொள்கிறார்கள்.

சட்டசபைத் தேர்தல் மாநில மாநாட்டு தீர்மானங்கள், கூட்டணி கட்சிகளுடன் நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தை மற்றும் தொகுதிப் பங்கீடு குறித்து பொதுக்குழுவில் விவாதிக்கப்படும்.

மாநாட்டு முடிவில் தொகுதிப் பங்கீடு குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும். இந்த முடிவைத்தான் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறும் மாநில மாநாட்டின் போது கருணாநிதி அறிவிப்பார். எனவே, இந்தக்குழுக் கூட்டம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டுமென்று தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் கூறியுள்ளார்.

## அ.தி.மு.கவுடன் கூட்டணி; மகிழ்ச்சி அடையவில்லை!

### திருமாவளவன் கூறுகிறார்



வேலூர்—

அ.தி.மு.கவுடன் விடுதலை சிறுத்தைகள் கூட்டணி வைத்துக் கொண்டதற்காக மகிழ்ச்சியடையவில்லை. தலித் மக்களுக்கு ஆட்சி அதிகாரம் பிரித்து அளிக்கப்பட வேண்டும் என திருமாவளவன் தெரிவித்தார்.

விடுதலைச்சிறுத்தைகள் சார்பில் தலித், கிறிஸ்தவர், இஸ்லாமியர் இட ஒதுக்கீடு தொடர்பான மாநாடு வேலூர் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

மாநாட்டுக்கு தலைமை வகித்து விடுதலைச்சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் பேசியதாவது -

விடுதலைப் புலிகளைப்பற்றி இங்கு பேசவேண்டாம் எனப்பலர் எச்சரித்தனர். ஈழத்தைப்பற்றிப் பேசினால் என்ன ஆகுமோ என்று கவலைப்பட்டதில்லை. விமர்சனங்களை வைத்து அரசியலில் கூட்டு வைக்கமுடியாது. வைகோ என்னை கொலைசெய்யச் சதி செய்தார் எனக்கூறிய கருணாநிதியுடன் வைகோ கூட்டு வைத்தார். வேலூர் சிறையில் 19 மாதம் இருந்த வைகோ, ஜெயலலிதாவுடன் கூட்டணி வைக்க பேரம் பேசவில்லையா? ஏழு கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொண்ட கருணாநிதிக்கு எட்டாவது கட்சியாக விடுதலை சிறுத்தைகளைச் சேர்த்து கொள்வதில் என்ன தயக்கம்?

எவ்வளவு காலம்தான் பா.ம.க தோள் மீது உட்கார்ந்து கொண்டு வருவது? இதற்காக 64 நாள் காத்திருந்தேன். மாற்று அணி அமைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தேன். தி.மு.க அணியிலிருந்து வெளியேவர காங்கிரஸுக்கு துணிவில்லை. பா.ம.கவுக்கு விருப்பமிருந்தாலும் வ[illegible]வில்லை. ம.தி.மு.கவுக்கு அந்த சிந்தனையே வரவில்லை.

இவர்கள் வெளியே வந்திருந்தால் தமிழகத்தில் மாற்று அணி அமைந்திருக்கும். இரண்டாவது முறையும் அழைப்பு விடுத்து பதில் வராத காரணத்தால் அ.தி.மு.க கூட்டணியில் சேர்ந்தேன். ஆனால், அ.தி.மு.கவுடன் விடுதலைச்சிறுத்தைகள் கூட்டணி வைத்துக்கொண்டதற்காக மகிழ்ச்சி அடையவில்லை. தலித் மக்களுக்கு ஆட்சி அதிகாரம் பிரித்து அளிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.



நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 5 ஆவது புதிய கட்டடத் திறப்பு விழாவில் - பேராசிரியர் குமாரவடிவேல் மங்கள விளக்கேற்றுவதையும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதையும், கணினிப் பிரிவை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் திறந்துவைப்பதையும், புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:– அருள்)

# தவறணைகளில் சாராயம் விற்கப்படுவதாக மதுபான விற்பனையாளர்கள் விசனம்!

பருத்தித்துறை

வடமராட்சி பகுதியில் கள் விற்கும் தவறணைகளில் சாராயம் போன்ற மதுபான வகைகளும் விற்கப்படுவதாக - மதுபானசாலை உரிமையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

மதுபான சாலைகளில் சாராயத்தை மட்டும் விற்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் பெற்று வரிகள் செலுத்தியும் வருகின்ற நிலையில் - கள்விற்கும் தவறணைகளில் சாராயமும் விற்கப்படுவதால் தமக்கு பெரும் நஷ்டம் ஏற்படுவதாகவும், உரியவர்கள் இதனைக் கண்டும் காணாமலும் இருப்பதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே உரியவர்கள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து தமது வியாபாரத்தை விருத்திசெய்ய உதவுமாறு வடமராட்சி மதுபான விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (12)

# ஊடக கற்கைநெறிக்கு 30 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட ஊடக வளங்கள் கற்கைநெறிக்கு இந்த ஆண்டு 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டு, 2005 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடைய மாணவர்களிடமிருந்து ஊடக கற்கைநெறிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

இதற்கமைய அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு நடைபெற்ற எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வின் அடிப்படையில் 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என -

ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.

## சிறுவர் இல்லங்களின் விபரங்கள் சேகரிப்பு

சாவகச்சேரி

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயலகம் ஊடாக யாழ். மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பற்றிய விபரங்கள்திரட்டப்பட்டுவருகிறது.

இதனடிப்படையில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முன்பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு இல்லங்கள், முன்பள்ளி ஆசிரியர்களின் விபரங்கள் தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் பகுதியினரால் திரட்டப்பட்டு வருகிறது.

உரியவர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (24)

## புகுமுக மாணவர்கள் வரவேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்

யாழ்.புதிய உயர் கல்லூரி புகுமுக மாணவர்கள் வரவேற்பு உபசார விழா நாளை மறுதினம் காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் க. தசிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும்-

பல்கலைக்கழக வணிகத்துறை முகாமைத்துவக் கற்கைநெறி பீடாதிபதி க.தேவராஜா சிறப்பு விருந்தினராகவும், இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் ந.சீவரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனா.

## தவக்கால நற்சிந்தனை



சிலரின் சுமைகளைப் பலர் சுமக்கும் உலகில் யேசு பலரின் சுமைகளைத் தானே சுமந்து பாவம் போக்கும் செம்மறியானார். மனித வாழ்விலே ஒருவரை அறிமுகம் செய்யும்போது அவரது பட்டம், பதவி, பணம் முதலியவற்றைக் கொண்டு பெரும் எடுப்புடன் இவர் மருத்துவர், பேராசிரியர், அதிபர், மந்திரி என்றே அறிமுகம்செய்து பெருமைப்படுவர்.

ஆனால் யேசுக்கு, அதுவும் இறைமகனுக்குக் கிடைத்த அறிமுகமோ "இவர் இறைவனின் செம்மறி. உலகின் பாவம் போக்குபவர்" என்பதாகும். யேசு தன்னையே பலியாக்க தலை நிமிர்ந்து சென்றார். தனது பெயருக்காக, புகழுக்காக அல்லது தன்னால மனித குலம் வாழ்வு பெறவேண்டும் என்ற பெரும் நோக்குடன் இதனைச் செய்யத் துணிந்தார்.

தந்தையின் சித்தம் ஏற்றார். இதோ இறைவனின் செம்மறி. மனிதரின் வாழ்வுக்காக, மகிழ்வுக்காக, உரிமைக்காக, ஈடேற்றத்துக்காக தன்னையே அர்ப்பணிக்கப் போகிறார் என்பதை திருமுழுக்கு யோவான் சுட்டிக் காட்டினார். மனித குலத்தின் அனைத்துப் பாவங்களையும் தானே சுமந்து பாதை மாறிய மனிதர்களின் வாழ்வை - அவர்களின் திசை மாறிய செயற்பாடுகளை நேரிய பாதையில் அழைத்துச்செல்ல பாவங்களைப் போக்கும் செம்மறியாகவும், சுமைகளைச் சுமக்கும் சுமை தாங்கியாகவும் தன்னையே உட்படுத்திக்கொண்டார்.

- மோ.தார்சீசியஸ்-

## விபரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் - வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் விபரங்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் திரட்டப்பட்டுவருகிறது.

குழந்தைகளினதும், தாயினதும் போசாக்கு நிலையை உயர்த்த சமுர்த்தி அமைச்சால் வழங்கப்படவிருக்கும் போஷாக்கு பொதி விநியோகம் தொடர்பாகவே இந்த விபரம் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சு.தேனுஜன்
முகவரி : வரணி.

அகவை ஒன்று



பெயர் : தி.ஜினோஜிகா
முகவரி : பளை

அகவை ஆறு



பெயர் : சி.சிந்துஜன்
முகவரி : பண்டத்தரிப்பு

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்!

நெல்லியடி

கரவெட்டி - கரணவாய் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மூத்த விநாயகர் கோவிலுக்கு அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் சித்திவிநாயகம் (வயது49) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இரவு 10 மணியளவில் இவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இருவர் குடிப்பதற்கு தண்ணீர் தருமாறு கேட்டனர். பிரஸ்தாப நபர் தண்ணீரை எடுத்துக்கொடுத்த வேளை அவர்கள் அதை வாங்கிக் குடித்துவிட்டு அயலிலுள்ள குடும்பஸ்தரைப்பற்றி விசாரித்தனர் என்றும் - பின்னர் அவர் வீட்டுக்குள் திரும்பிச் செல்ல முற்பட்டவேளை தடிகள், பொல்லுகளால் தாக்கப்பட்டதாகவும் காயம டைந்தவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

# போக்குவரத்து செய்யமுடியாத பழைய தபால்கந்தோர் வீதி!

யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் முன்னர் பழைய தபாலகம் இயங்கிய வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

ஸ்ரான்லி வீதியூடாக - யாழ். நகருக்குச் செல்லுகின்ற இந்த வீதியில் இரண்டு பக்கங்களிலும் தனியார் மினிபஸ்கள் தரித்துநிற்பதாலும், வீதியில் இரண்டு பாரிய குழிகள் ஏற்பட்டு இருப்பதாலும் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இந்த வீதியில் இதேநிலைமை காணப்படுகின்ற போதிலும், இதற்கான நடவடிக்கையை உரியவர்கள் எடுக்காது இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக இருப்பதாக பாதசாரிகள் தெரிவித்தனர். (அ)

# கோப்பாய் கல்விக்கோட்டத்தில் சேவைநலன் பாராட்டு விழா!

யாழ்பாணம்

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் என 10 இற்கும் மேற்பட்டவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விழாவின் வரவேற்புரையை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் எஸ்.அகிலதாஸும், தலைமையுரையை கோப்பாய் கோட்ட ஆசிரியர் சங்கத் தலைவர் சித்திரவடிவேலும், வாழ்த்துரையை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (அ)

## விண்ணப்பம் கோரல்

கரவெட்டி

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களம், கரவெட்டி பிரதேச செயலகத்தினூடாக நடத்த இருக்கின்ற மின்னிணைப்பு, குழாயிணைப்பு பயிற்சிநெறிகளுக்கான போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரங்களை 15.03.2006 ஆம் திகதிக்குமுன் - பிரதேச செயலாளர், கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் மேலதிக விபரங்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

■ ■ ■

கரவெட்டி

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில் திணைக்களம் - கரவெட்டி பிரதேச செயலாளர் ஊடாக ஆறு மாத காலத்துக்கு மின்னிணைப்பு, குழாயிணைப்பு ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கவிருக்கிறது.

இந்தப் பயிற்சி நெறிகளில் சேர்ந்து பயிற்சி பெறவிரும்புவோர் கிராம சேவையாளரிடம் (கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவு) விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 15. ஆம் திகதிக்குமுன் - பிரதேச செயலாளர், கரவெட்டி என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகிறது.

## ஆங்கில மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுத்தல்

கொக்குவில்

யாழ்.அடைக்கல அன்னை தேவாலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5.30 மணிக்கு ஆங்கில மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு நடைபெற்று வருவதாக பங்குத்தந்தை அருட்திரு. ம.இ.பயஸ் அடிகளார் தெரிவித்தார்.

ஆங்கிலம் கற்கும் மாணவர்கள் மற்றும் உதவி வழங்கும் தனியார் நிறுவன ஊழியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, கடந்த மாதம் 19 ஆம் திகதிமுதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இந்தத் திருப்பலி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் நடைமுறையில் இருந்து வந்ததாகவும், நாட்டு நிலைமையால் இது தடைப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (206)



சிநேகிதியே

# கருவிலிருந்து தொடங்கும் வேற்றுமை

பெண்கள், ஆண்களுக்கு அடிமைப்பட்டவர்கள். அவர்களுக்கென்று எந்தவித எதிர்பார்ப்பும் இருக்கக்கூடாது என்று கருதிய காலத்தில் அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டன. அதுகடந்த காலம்.

ஆனால், இன்று நிலைமை அப்படியாகவா இருக்கிறது? பெண்களுக்கென்று எண்ணங்களும், ஆசைகளும், எதிர்பார்ப்புகளும் இல்லாமலா இருக்கிறது?

இதில் படித்தவர்கள், வேலை பார்ப்பவர்கள், வசதி உள்ளவர்கள் என்று பாரபட்சம் எதுவுமில்லை. அனைத்துப்பெண்களுக்கும் அவர்தம் நிலைமைக்கு ஏற்ப எதிர்பார்ப்புகளும், ஆசைகளும் இருப்பதையே பார்க்கிறோம்.

பெண்களுக்கான பல உரிமைகள் - சட்டங்களால் வலியுறுத்தப்பட்ட பின்னர் இன்னும் ஏன் இந்த தாழ்வு மனப்பான்மை?

நாம் ஆண்களுக்கு அடிமையானவர்கள், மட்டமானவர்கள் என்ற இந்த எண்ணம் ஏன்? பெண் அடிமைப்பட்டவர்கள் என்ற எண்ணம் அவர்களிடமிருந்து முதலில் அகல வேண்டும்.

நமது அரசியல் சாசனமும், சொத்துரிமைச் சட்டங்களும், விவாகச் சட்டங்களும் மற்றும் பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களும், பெண்களுக்காக அவர்களின் தனித்தன்மைகளையும், உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காக வகுக்கப்பட்ட பின்பும் ஏன் சட்டத்தின் மீது குறை?

நமது கண்ணோட்டம் மாற வேண்டும். சிந்தனைகள் வளர வேண்டும். சில தேவையற்ற பிடிவாதங்கள் பெண்களிடமிருந்தும், பொதுவாக சமூகத்திடமிருந்தும் அகல வேண்டும்.


அனைவரின் நலனுக்காக இயற்றப்பட்ட சட்டங்களையும், அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் கொள்கைத் திட்டங்களையும் நாம் ஏன் சரிவரப் பயன்படுத்தக்கூடாது? ஆணோ, பெண்ணோ, ஒன்று அல்லது இரண்டு குழந்தைக்குக்கு மேல் வேண்டாம் என்ற கொள்கை ஏன் பலரை எட்டவில்லை?

ஒருவேளை தன்னுடைய அந்திமக் காரியங்களைச் செய்வதற்கு ஆண்பிள்ளை தான் வேண்டும் என்ற எண்ணமா? அல்லது பெண்ணாகப்பிறந்து விட்டால் அது குடும்பத்துக்குப் பாரமாக அமைந்து விடுமோ என்ற பயமா? என்ன காரணம் பெண் சிசு வேண்டாம் என்பதற்கு? எது அவர்களை இவ்வாறு சொல்ல நிர்ப்பந்தப்படுத்துகிறது?

என்றோ ஒரு நாள் இறந்த பின்பு அவர்களுக்கு கருமம் செய்ய வேண்டும் என்பதற்காக தாங்கள் உயிருடன் இருக்கும் காலத்தில் தங்களை உதாசீனப்படுத்தினாலும், அப்படிப்பட்ட பிள்ளை தான் வேண்டும் என்று நினைப்பதும் மிகுந்த முட்டாள்தனம் இல்லையா? முழுவதும் பகுத்தறிவுக்குப் பொருந்தாததும், புறம்பானதுமாகும்.

இன்று பல குடும்பங்களில் பெண்களே பெற்றோர்களை பரிவுடன் பராமரிக்கிறார்கள், பாதுகாக்கிறார்கள் என்ற நிலை வந்த பின்பும் சமுதாயத்தின் கண்ணோட்டம் மாறவில்லையே? ஏன்?

அதேபோல பெண்களும் படிக்கலாம், எல்லாத் துறைகளிலும் முன்னேறலாம் அவர்களுக்குப் பெற்றோர் சொத்தில் சமபங்கு உண்டு அவர்களுக்கும் பெற்றோர்களைக் காப்பாற்ற கடமையுண்டு என்ற நிலைமை மாறிய பின்பும் ஏன் பெண் சிசுவதை?



# கோடையில் தாகம் தீர்க்கும் வத்தகப்பழம்




கோடை என்றாலே நாவறட்சி என்பது பொதுவாக எல்லோருக்கும் ஏற்படுவது இயற்கை. இதனால் தாகம் தீர்க்கும் குளிர்பானக் கடைகள், ஐஸ்கிறீம் கடைகள் என்று காளான்களைப்போல பார்த்த இடங்களில் எல்லாம் நுழைந்துவிடுவதை பார்க்கிறோம்.

குறிப்பாக கோடை காலத்தில் தாகத்தை தணிக்கும் சக்தி - வத்தகப் பழத்துக்கு உண்டு. கோடை காலத்தில் மட்டுமே காய்க்கும் இந்த வத்தகப்பழம் - நகர மக்களின் தாகத்தை தீர்க்க வந்த ஒரு வரப்பிரசாதமாகத் திகழ்கிறது. சுட்டெரிக்கும் வெயிலில் சுற்றித்திரிபவர்கள் சற்று இளைப்பாறவும், இது தாகத்தைத் தீர்க்கவும் இது பெரிதும் பயன்படுகிறது.

ஏழை - எளியவர்களின் அப்பிளாக இது விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இதில் தாகம் தீர்க்கும் நீர்ச்சத்து மட்டும் தான் இருக்கிறது என்பதில்லை, உடலுக்கு தேவையான புரதச்சத்தும், ஊட்டச்சத்தும் இதில் அதிகமுள்ளது.

100 கிராம் சதைப்பற்றிலுள்ள சத்துக்களைப் பார்த்தால் புரதம் 10 கிராம், மாப்பொருள் 70 கிராம், தாயமின்.05 மில்லிகிராம், விற்றமின் ஏ-59 வீதம் என்பன அடங்குகின்றன. சிவப்பு நிறத்தில் சதைப்பற்றுள்ள ரகங்களையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

# பப்பாளியின் மருத்துவக் குணங்கள்



எளிதில் கிடைக்கக்கூடிய மிக மலிவான விலையுள்ள பழம் பப்பாளிப்பழம். நல்ல மலமிழக்கியாகவும், பித்தத்தைப் போக்குவதாகவும் உள்ள பப்பாளி சற்றே எண்ணெய்ப் பசையாக உள்ள பழமாகும்.

இதுவும் உடலுக்குத் தெம்பூட்டும். இதயத்துக்கு நல்லது. மனநோய்களைக் குணமாக்குவதில் உதவும். கல்லீரலுக்கும் ஏற்றது. கணைய வீக்கத்தைக் கட்டுப்படுத்தும். சிறுநீர்க் கோளாறுகள், மலச்சிக்கல் பிரச்சினைகளுக்கு அருமருந்து.

பப்பாளியிலுள்ள சர்க்கரையில் பாதி குளுக்கோஸாகவும், மீதி பழச்சக்கரை ஆகவுமுள்ளது. பழங்களிலேயே விற்றமின் 'ஏ' சத்து கூடுதலாக உள்ள பழம் பப்பாளி. பழுக்கப் பழுக்க விற்றமின் 'சி' கூடும்.

**மருத்துவப் பயன்கள்**

பழுக்காத பச்சைப் பப்பாளித் துண்டுகள் அல்லது சாறை அருந்தினால், குடலிலுள்ள வட்டப்புழுக்கள் வெளியேறும். கல்லீரல் கோளாறுகளுக்கும் பப்பாளி மருத்துவரீதியாக சரி செய்யும். முறையான மாதவிலக்கு ஒழுங்குக்குப் பப்பாளி உண்பது சரியான வழி. அடிவயிற்றுப் பிரச்சினைகளுக்கு பப்பாளியே மிகச் சிறந்த மருந்து வயிற்றுக் கடுப்பு, சமிபாடின்மை, அமிலத் தொல்லை, மலச்சிக்கல் இவற்றுக்கெல்லாம் அருமருந்து. பப்பாளி இரத்தச்சோகைக்கு நிவாரணமளிக்கும். மண்ணீரல் வீக்க சிகிச்சையில் பப்பாளி பயன்படுகிறது.

இளமைப் பொலிவைக் கூட்டி வயோதிபத்தைக் கட்டுப்படுத்துவதாகப் பப்பாளிகளை சிறப்பித்துக் கூறுவர். மாற்றி மாற்றிக் குடித்தால் உடல் கழிவுகள் நீக்கத்தில் பெரும்பயன் விளையும்.

புற்றுநோயைக் குணப்படுத்த வல்லது. மருந்துகளில் சிகிச்சை பெற்ற பின் ஒருவர், பப்பாளி நிறையச் சாப்பிட வேண்டும். ஏனெனில் குடல் தசைகளில் அழிக்கப்பட்டிருக்கும் நல்ல பக்ரிறீயாக்களை மீண்டும் உற்பத்தி செய்வதற்கு பப்பாளி உதவும். சிறிநீரகக் கோளாறுகளுக்கும் பப்பாளி மருந்தாகும். மலச்சிக்கலுக்கும், ஆஸ்துமாவுக்கம் பப்பாளி உண்பது நல்லது.

முகப்பரு உள்ளவர்கள், பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக முகத்தில் தேய்க்க வேண்டும். இது முகப்பருக்களைப் போக்கி, முகச் சுருக்கங்களையும் நீக்கி, பொலிவு கூட்டும். நன்றாகப் பழுத்த பப்பாளிப் பழத்தின் விதைகள், குடல் புழுக்களை வெளியேற்ற உதவும். கூடவே தாகம் போக்குவதில் நல்ல பயன் தரும். பப்பாளி இலைகளின் பொடி யானைக்கால் வியாதிக்கும், நரம்பு வலிகளுக்கும் மருந்தாக விளங்குகிறது.



# பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளுக்கு அறிவூட்டல்...

ஐந்து வயது ஆகிவிட்டாலே உங்கள் குழந்தை சிறுவன் என்றுதான் அர்த்தம். இப்போது அவர்களைச் சுற்றி நடப்பது எல்லாம் புரியும். தாம் பார்ப்பதையும், கேட்பதையும் அப்படியே நிஜம் என்று நம்பும் வயது. அம்மா, அப்பா சொல்வதை அப்படியே எடுத்துக் கொள்ளும் வயது. சதா எதையாவது செய்ய வேண்டும் என்று துருதுருக்கும் பருவம்.

எல்லாவற்றையும் உடனே செயற்படுத்தும் ஆர்வம் எப்பொழுதும் விளையாட்டு, வேடிக்கை வினோதங்களை ரசிக்கும் பருவம்.

இந்தப் பருவத்தில் தான் குழந்தைகள் நன்கு வளைந்து கொடுக்கும். நாம் சொன்னதைச் செய்யும். அதனால் தான் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பார்கள்.

சில பெற்றோர்கள் பிள்ளைகள் முதலாம் வகுப்புக்கு வந்து விட்டதும் இனி எப்பொழுதும் முதன்மை மாணவனாக வர வேண்டும் என்று கண்டித்து மிரட்டி பாடம் சொல்லிக் கொடுப்பதில் குறியாக இருப்பார்கள்.

சில பெற்றோர்கள் குழந்தை தானே சின்ன வகுப்புத்தானே படிக்கட்டும், இன்னும் கொஞ்சநாள் போகட்டும் என்று அவர்களைப் படிப்பதைப் பற்றி கவலைப்படாமல் சதாரணமாக எடுத்துக் கொள்வார்கள். இரண்டுமே தவறான அணுகுமுறை.

குழந்தைகளுக்குப் படிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பருவம் தான் இது. ஆனால் கண்டிப்போ, கோபமோ கண்டிப்பாக உதவாது. அன்பாக எடுத்துக் கூறி நீ நன்கு படித்து நிறையப் புள்ளிகளை வாங்கினால்தான் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லி, மெல்ல மெல்ல அவர்களை தன் வழிக்குக் கொண்டு வரவேண்டும்.



நீங்கள் எடுத்து சொல்லும் விதம் அவர்களை முதன்மை மாணவனாக ஆக்கும் வண்ணம் இருக்க வேண்டும். அதே சமயம் அவர்கள் படிப்பு ஆர்வத்தை தூண்டும் விதமாக இருக்க வேண்டும்.

படிப்புடன் கூடவே பாட்டோ, நடனமோ, விளையாட்டோ, நீச்சலோ, கிரிக்கெட் போன்ற ஏதாவது ஒரு துறையை அவர்களுக்குப் பிடித்தமான ஒன்றை தேர்வு செய்து அதில் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க ஆரம்பியுங்கள். ஏனெனில், வாழ்க்கை வாழ்வதற்கு தான். அதற்கு படிப்பு முக்கியம், ஆனால், குழந்தை விருப்பமான பொழுது போக்கில் அவர்களை ஈடுபடுத்தினால் தான் முடியும்.

பிற்காலத்தில் உங்கள் குழந்தைகள் எத்தனையோ போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். அந்தத்தருணத்தில் குழந்தைகளுக்கு மன அழுத்தம் வராமல் அவர்களை உற்சாகப்படுத்துவது சந்தோசப் படுத்துவதும் இப்பொழுது கற்கும் அவர்களுக்கு பிடித்த கலைகள் மட்டுமே! ஆகவே குழந்தைகளின் ஆர்வத்தை ஊக்கப்படுத்தி நல்ல பயிற்சி அளிக்க வேண்டும்.

இதுவரையில் பசி அறிந்து உணவு கொடுத்து இருப்பீர்கள் இனிருசி அறிந்து அதற்கேற்ப கவனியுங்கள்....

நல்ல பழங்களை கண்டிப்பாக சாப்பிடவையுங்கள். ஏன் என்றால் அவர்கள் வளரத் தொடங்கிவிட்டார்கள். நல்ல போஷாக்கு இப்பொழுது அவர்களுக்குத் தேவை.

நல்ல புத்தகங்களை வாங்கிப் படிக்க பழக்குங்கள். குழந்தைகளின் அறிவுத்திறனை வளர்க்க நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால் அந்தப் புத்தகங்களைவிட இன்றைய குழந்தைகள் கற்பனைக் கதைகளைத் தான் விரும்பிப்படிக்கின்றார்கள். அவையெல்லாம் வெறும் கற்பனை, உண்மையல்ல என்பதை வலியுறுத்துங்கள். டி.வி.யில் பார்க்கும் குழந்தைகளுக்கான தொடர்களில்கூடப் பற்பல மாயாவிகள் வருவதைத்தான் பார்க்கின்றனர்.



ஆகவே பார்ப்பதை நிஜம் என்று நம்பும் இந்தப் பருவம் ஒரு இரண்டுங் கெட்டான் பருவம். ஆகவே இவையெல்லாம் கற்பனைதான். 'அவன் நிஜமனிதன் அல்ல' என்று விளங்குங்கள்.

மேலும் தன் வேலையை தானே செய்யும் பருவம் இது. எனவே அவர்களை வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துங்கள். அட்டவணையைப் பார்த்து பள்ளிக்கு புத்தகத்தை எடுத்துச் செல்வதற்கும் விளையாட்டு சாமான், புத்தகம் எல்லாமே அதனதன் இடத்திலே வைக்கப் பழக்குங்கள்.


சில தாய்மார்களுக்கு எல்லா வேலையும் தாங்களே செய்தால் தான் திருப்தி ஏற்படும். அப்படி செய்தால் உங்கள் குழந்தை உங்களை சார்ந்து இருக்கப் பழகிவிடுவான். அது அவர்களுக்கு நல்லதல்ல. அவர்கள் உடுத்தியிருக்கும் உடைகள் நல்ல சுத்தமானவைகளாக எப்பொழுதும் பளிச் என்று இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அது அவர்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும். எப்பொழுதும் சுத்தமாக இருக்க பழகிவிடுவார்கள்.

நிறைய இனிப்புகள் சாப்பிடத் தொடங்கும் பருவம். பல் சிதைவு வராத குழந்தைகள் அபூர்வம். ஆகவே இனிப்புப் பண்டங்களை, சொக்லேட் போன்றவற்றை சாப்பிட்டவுடன் பல்லை மறுபடியும் தேய்க்கப் பழக்குங்கள்.

ஐந்து வயதிலிருந்து எட்டு வயது வரை அதாவது முதலாம் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரையில் பள்ளியில் குழந்தைகளுக்கு அடிப்படைகளை ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய மூன்றிலும் போதிக்க ஆரம்பிக்கிறார்கள்.

ஆகவே அந்த அஸ்தி வாரம் பலமில்லாவிட்டால் பின்பு என்ன படித்தாலும் ஏறவே ஏறாது.

# கேள்விக்குள்ளான நிலையில் கோழிப்பண்ணைத் தொழில்?



காலத்துக்குக் காலம் உலகம் பல்வேறு புதிய புதிய' நோய்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகி வருகிறது. இந்த நோய்கள் பலவற்றுக்குத் தடுப்பு மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டாலும், இன்றைய நவீன உலகில் மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத, ஆபத்தான நோய்கள் மனிதர்களுக்கு பெரும் அழிவையும் ஏற்படுத்தி வருகின்றன. இவை பொருளாதார வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

எயிட்ஸ், சார்ஸ் என்று மனிதர்களை உலுப்பி எடுத்துக் கொண்டிருக்கும் நோய்களுக்கு மத்தியில் பறவைக்காய்ச்சல் (Bird flu), இன்று மக்கள் மத்தியில் பாரிய அழிவுகளையும், பொருளாதார பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகிறது.

இந்த நோய் ஒருவித வைரஸால் உருவாகிறது. எனினும், இந்த நோய் மனித உயிர்கொல்லி நோயாக மட்டுமன்றி, உலகின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுவதாகவும் இருக்கிறது.

ஆரம்பத்தில் இந்த நோய்த் தாக்கத்தால் பல மில்லியன் மக்கள் இறந்திருந்தாலும் குறிப்பாக 1983-84 ஆம் ஆண்டுகளில் இது ஒரு 'ஏவியன் இன்புலுவென்ஸா' - அதாவது இது ஒரு பறவைநோய் என்று இனங்காணப்பட்டு 2 மில்லியனுக்கும் அதிகமான பறவைகள் அமெரிக்காவில் அழிக்கப்பட்டன.

1997ஆம் ஆண்டு மீண்டும் இந்த நோயால் பீடிக்கப்பட்ட 16 பேரில் 9 பேர் ஹொங்கொங்கில் இறந்தனர். இதைத் தொடர்ந்த காலப்பகுதிகளில் தான் ஐரோப்பிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு ஓரளவு இதன் பரம்பல் தடுக்கப்பட்டது.

அதேவேளை, அண்மைக்காலமாக ஆசியப் பிராந்தியத்தில்தான் இந்த நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. சீனா, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா என்று பரவிய இந்த நோய் இன்று இந்தியப் பிராந்தியத்திலும் நுழைந்துவிட்டது.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் இந்த நோய் இன்று பரவிவருகிறது. இதனால் நோய்க்கட்டுப்பாட்டுக்காக அங்கு பல லட்சக் கணக்கில் வளர்ப்புப் பறவைகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

எனினும், இந்த நோய் தமிழகத்தின் பகுதிகளில் தாக்குவதற்கு சாத்தியமில்லை. அதாவது இந்த வைரஸ் பரம்பலுக்கான காலநிலை தமிழகத்தில் இல்லை என்றும் கூறப்படுகிறது. இது ஒரு வகையில் சாத்தியப் பாடானதாக இருக்கலாம். ஏனெனில், இந்த நோய் பெரும்பாலும் தூரதேச பறவைகளாலேயே பரப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வருடத்தில் குறிப்பிட்ட காலத்துக்குத்தான் இந்தப் பறவைகள் தமது பறப்பை மேற்கொள்வதுண்டு. இந்த நிலை ஒரு வகையில் தமிழக ஆய்வாளர்களின் கருத்துக்கு ஒத்துப்போகலாம்.

இதேநிலைதான் இன்று இலங்கையிலும் காணப்படுகிறது. பருவகாலப் பெயர்ச்சிப் பறவைகளூடாகவே இந்த நோய் பெரும்பாலும் நாடுகளுக்குக் கடத்தப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றன.

பருவப் பெயர்ச்சி பறவைகள் பெரும்பாலும் செப் ரெம்பரிலிருந்து டிசெம்பர், ஜனவரி மாதங்கள் வரையே- பெரும்பாலும் இங்குவருவதுண்டு.

இன்று, இலங்கையில் மக்கள் மத்தியில் பறவைக்காய்ச்சல் பற்றிய அபரிமிதமான அச்சம் தொற்றியுள்ளது. இதனால் இலங்கையின் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான பங்கை வகிக்கும் கோழிவளர்ப்பு - அபாயமான நிலைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சுமார் 75 ஆயிரம் பண்ணையாளர்கள் இலங்கையில் இந்தத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இன்றைய இந்த அச்சம் பெரும்பாலும் கோழி இறைச்சி, முட்டை பாவனையாளர்களைக் குறைத்துள்ளது. இதனால் கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பெரும் பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள் பெரும்பாலும்- கடன் அடிப்படையில் முதலீடுகளைப் பெற்றே தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் எனும் அடிப்படையில் பெரும்பாலும் சுழற்சிமுறைக் கடன்களை வழங்கி வருகின்றன. இதன் அடிப்படையில்தான் அநேகமான பண்ணையாளர்கள் கடன்களைப் பெற்று தொழிலில் ஈடுபடுகின்றனர்.

எனினும், இவர்கள் இன்றைய இந்த அச்சத்தால் கோழி இறைச்சி, முட்டை என்பவற்றைச் சந்தைப்படுத்தவோ, பாவனையாளர்கள் கொள்வனவு செய்வதோ திடீரென வெகுவாகக் குறைந்துள்ளது. இந்த நிலை சுயதொழில் முயற்சியாளர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் இன்று கோழி இறைச்சி, முட்டை விற்பனையில் பாரிய வீழ்ச்சி காணப்படுகிறது. எனினும், தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் இவை பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களாகவே காணப்படுகின்றன.

இதுதவிர, இந்த நோய் பரவுவதோ, இல்லையோ பெரும்பாலும் பாதிக்கப்படப்போவது வடக்கு- கிழக்கு மக்கள்தான். ஏனெனில், கடந்த இரு தசாப்த போராலும், சுனாமி அனர்த்தத்தாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு-கிழக்கு மக்கள்தான்.

இந்த நிலையில் வாழ்வில் விரக்தி, வேதனை, நம்பிக்கை வரட்சி ஏற்பட்டிருந்த மக்களுக்கு- அவர்களின் வாழ்வியலை மீளமைக்கவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உள்ளூர் மற்றும் வெளியூர் தொண்டு நிறுவனங்கள் பலவும் மக்களின் அன்றாட ஜீவனோபாய திட்டத்தின்கீழ் சுழற்சிக் கடன் அடிப்படையில் பணமாகவோ, பொருட்களாகவோ வழங்கி வருகின்றன.

எனினும், இன்றைய நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் கோழிப்பண்ணையாளர்கள், அவற்றைச் சந்தைப்படுத்தித்தான் கடன் மீளளிப்புச் செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில், பாதிப்புக்குள்ளான பண்ணையாளர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கவோ, நட்டஈடு வழங்கவோ அல்லது கடன் திட்டங்களை மீளளிக்காத கடன்களாக மாற்றவோ- அரசோ, தொண்டு நிறுவனங்களோ முன்வருமா? என்ற கேள்வி எழுகிறது.

கோழி இறைச்சி, முட்டை பாவனை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதால் இவற்றைச் சந்தைப்படுத்த முடியாதநிலை தோன்றியுள்ளது.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் இந்தக் கோழி வளர்ப்பை நம்பியே ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. குறிப்பாக பண்ணைகளில் புறொயிலர் கோழிகளே இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்தில் இவற்றை சந்தைப்படுத்தவில்லை எனில், பண்ணையாளர்களின் ஒட்டுமொத்த வருமானத்தையே இவை தின்று தீர்த்துவிடும்.

கிழக்கு மாகாணத்திலும் கோழி இறைச்சி, முட்டை என்பவற்றின் பாவனை வீழ்ச்சியடைந்துள்ளது. பாவனையாளர்கள் இவற்றை வாங்கி உண்ண அஞ்சுகின்றனர்.

இந்த நோய் இந்தியாவின் வட மாநிலங்களில் இருந்து தென்மாநிலங்களுக்குக் கூட இன்றும் பரவாத நிலையில்- இலங்கை அரசாங்கம் வடக்கு-கிழக்கு மக்களை அச்சுறுத்தும் வகையிலான எச்சரிக்கைகளை விடுத்து வருகிறது.

அண்மையில் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் அமரசேகர வடக்கு-கிழக்கு பகுதிகளில் தான் பறவைக் காய்ச்சல் அதிகம் பரவுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கை உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஒரு நெருக்கடியையே ஏற்படுத்தியுள்ளது. அதாவது, இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்படும் பறவைகளில் இருந்து இந்த நோய் பரவக்கூடும் என்று தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளையும், ஆராய்ச்சி மையங்களையும் பல்வேறு இடங்களில் அமைத்துள்ள இலங்கை அரசு - பெருமளவான மக்கள்- கோழி வளர்ப்பையே நம்பி ஜீவனோபாயம் மேற்கொள்ளும் வடக்கு-கிழக்கில் இதுவரை எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எந்தவொரு ஆராய்ச்சி மையங்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கவுமில்லை.

இந்த விடயத்திலும் பேரினவாத சிந்தை கொண்ட அரசு- பல்வேறு நொண்டிச் சாட்டுக்களைக் கூறி வருகிறது. அதாவது, விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் ஆராய்ச்சி மேற்கொள்ளவோ, ஆய்வு மையங்கள் அமைக்கவோ முடியாதநிலை காணப்படுவதாகக் கதை விடுகின்றார் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் அமரசேகர.

பறவைக்காய்ச்சல் பற்றிப் பேச்சளவில் அரசு கதைத்துக்கொண்டிருக்கிறதே தவிர, எந்தவொரு ஆக்கபூர்வமான, விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மேற்கொண்டதாக இல்லை.

இந்த நோய் பற்றிய அச்சத்துடன் இருக்கும் கோழிப் பண்ணையாளர்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ, துறைசார் வல்லுனர்களோ விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அதேவேளை, வெளிநாட்டுப் பறவைகள் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்திலிருந்து பெரும்பாலும் வடக்கு-கிழக்கு நோக்கியே வருவதால் பெருமளவான ஆய்வுமையங்கள் அமைத்து, விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை வைத்துப் பண்ணையாளர்களுக்குத் தொழில் நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

அத்துடன், கோழி இறைச்சிப் பாவனையாளர்கள் தொடர்ந்தும் இறைச்சி, முட்டை என்பவற்றைப் பயன்படுத்துவற்கான உறுதிப்பாடு வழங்கப்படவேண்டும்.

இந்த நோய் மனிதனில் இருந்து மனிதனுக்கு இதுவரை தொற்றியதாகக் கண்டறியப்படவில்லை. அதேவேளை, கோழி இறைச்சி, முட்டை என்பவற்றை நன்றாக சமைத்தால் இந்த வைரஸ்தாக்கம் செயலிழக்கும் என்று மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆசியப் பிராந்தியத்தில் மூர்க்கம் கொண்டிருந்த இந்த நோய், மீண்டும் ஐரோப்பாவிலும் தொற்றியுள்ளது. அண்மையில் பிரான்ஸில் ஏற்பட்ட பறவைக்காய்ச்சலால் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வான்கோழிகள் அழிக்கப்பட்டன.

எனினும், இங்கு பறவைக்காய்ச்சல் பற்றிய அச்சத்தை விடுத்து, நன்றாக கோழி இறைச்சி சாப்பிடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் வடக்கு-கிழக்கைப்பொறுத்த வரையில் ஏராளமான பண்ணையாளர்கள் இந்த நோய் தொடர்பான அச்சத்தால் பாதிப்படைந்துள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைத் தணிக்க, நோய் தொடர்பான பூரண விளக்கங்களும், நோய் அறிகுறிகள் மற்றும் நோய் ஏற்படின், தடுப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பாகத் துறைசார் வல்லுநர்கள் தெளிவுபடுத்தவேண்டும்.

இந்த நிலை தொடருமானால், இன்னும் குறுகிய காலத்தில் இலங்கையில் கோழி வளர்ப்புத் தொழிலை எவரும் மேற்கொள்ள முடியாத நிலை உருவாகும்.

**- வசந்தன் -**

## கணக்காளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் அரச நிர்வாகங்களில் கடமையாற்றிய கணக்காளர்கள் நான்கு பேர் வெளி மாவட்டங்களுக்கு நேற்று முன்தினம் இடம்மாற்றம் பெற்றுள்ளனர்.

கில்டேல் குணம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கும் - எஸ்.கமலேஸ்வரன் வவுனியா பிரதேச செயலகத்துக்கும் - திருமதி ஆர்.ராஜேஸ்வரி மன்னார் மாவட்டச் செயலகத்துக்கும் -எஸ்.குகதாஸ் திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கும் இடமாற்றத்தைப் பெற்றுள்ளனர். (110)


## போக்குவரத்துக்கு இராணுவம் தடை

யாழ்ப்பாணம் —

புன்னாலைக்கட்டுவனிலிருந்து அச்செழு ஊடாக நீர்வேலிக்குச் செல்லும் வீதியில் - இராணுவ முகாமுக்கு முன்னால் இரவு வேளையில் போக்குவரத்துக்குத் தடை போடப்பட்டுள்ளது.

இந்தத் தடையானது - இரவு 8 மணியிலிருந்து மறுநாள் அதிகாலை வரை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இந்தப் பாதையூடாகப் பெருமளவான விவசாயிகள் சென்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இந்தத்தடை காரணமாக அவர்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (68)



நல்லூர் றோட்டறக்ட் கழகம் நடாத்திய விவாதச் சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்ற மருதனார்மடம் ராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிக்கு - யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி க.தேவராஜா வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (111)

# கிளிநொச்சி வலயத்திலுள்ள பாடசாலைக்கு வளங்களை பகிர்ந்தளிக்க முடியாதுள்ளது

## கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராஜா

கிளிநொச்சி—

எமது கல்வி வலயத்துக்கு கிடைக்கின்ற வளங்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க முடியாமல் இருப்பதாக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்ன ராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது கல்வி வலயத்தில் 96 பாடசாலைகள் இயங்குகின்றன. இந்தப் பாடசாலைகளில் கடந்த காலப் போரால் 57 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இந்தப் பாடசாலைகளை முழுமையாகப் புனரமைக்க முடியாத நிலையிலேயே உள்ளோம்.

வலயக் கல்விப் பணிமனைக்கு கிடைக்கின்ற மிகக்குறைந்த அளவிலான வள உதவிகளை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் போன்ற மிகவும் பின்தங்கிய பாடசாலைகளை முன்னேற்றுவதற்கான திட்டங்களை வகுத்திருந்த போதிலும், உரிய நேரங்களில் உதவிகள் கிடைக்காதால் எமது திட்டங்களை செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளோம்.

இந்தப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். ஆசிரியர் பற்றாக்குறை என்பது எமது பாடச்ாலைகளில் ஒரு பொதுவான பிரச்சினையாக உள்ளது.

எமது கல்வி வலயத்துக்கு நியமனம் பெற்றுவரும் பட்டதாரி ஆசிரியர்கள் பொய்யான காரணங்களை கூறி, இடமாற்றம் பெற்றுச் செல்வதிலேயே அக்கறையாக உள்ளனர். எமது கல்வி வலயத்துக்கு நியமனம் பெற்று வந்த 236 பட்டதாரி ஆசிரியர்களில் 200 பேர் வரையானோர் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர் அல்லது நகரப் பாடசாலைகளுக்கு மாற்றங்களை கோரியுள்ளனர்.

இந்த நிலையில், பின்தங்கிய பாடசாலைகளில் மனவிருப்பத்துடன் பணியாற்ற ஆசிரியர்கள் முன்வராததால், பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவும்.

கிராமப் புறபாடசாலைகளில் பணியாற்ற அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் வளம் எமது கல்வி வலயத்துக்கு இன்று தேவையாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பித்த இந்த நிகழ்வில்- தமிழீழத் தேசியக் கொடியை அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் மாறன் ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கொடி, இல்லங்களின் கொடி எற்றப்பட்டதைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.

விளையாட்டுப்போட்டிவிழாவைத் தொடர்ந்து பரிசளிப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரையை பாடசாலை அதிபர் திருமதி.ப.சோதிலிங்கம் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை கிராம அலுவலர் ப.சபாரெட்ணம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராஜா ஆகியோர் நிகழ்த்தினர். இதில் பாண்டியன் இல்லம் முதலாம் இடத்தையும், சோழன் இல்லம் இரண்டாம் இடத்தையும், சேரன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

# பட்டப்பின் படிப்பு டிப்ளோமா வகுப்பு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு ஆசியர் கல்விக்கான பிராந்திய நிலையத்தில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா வகுப்பு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது என சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் அறிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரிய மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுகின்றது. (09)

# வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி.கோவாலரா தலைமையில் நடைபெறவுள்ளது. (09)

# பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயத்தில் புதிய விளையாட்டு மைதானம் அமைப்பு

வவுனியா—

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டுமைதானத்தில் நேற்று முன்தினம் இல்லமெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது.

புதிய மைதானத்தை வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தமையையுரையை பாடசாலை அதிபர் தனபாலசிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து மாணவர்களின் உடற்பயிற்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி ஐ.இராஜரட்ணம், வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. நா.மாணிக்கவாசகம், வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா, வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர் கலாவதி சிவலிங்கம் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (03)

# வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் பள்ளிச் சேமிப்பு அலகு திறந்துவைப்பு

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் பள்ளிச் சேமிப்பு அலகு நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் சி.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் சோழமறவன் ஏற்றிவைத்தார். பாடசாலைக்கொடியை பாடசாலை அதிபர் சி.கனகசிங்கம் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை வட்டக்கச்சி பங்குத்தந்தை றோகான், வன்னி வேளாண் முகாமையாளர் சி.புவனேஸ்வரன், முதன்மை உள்ளக கணக்காளர் சு.ரவீந்திரன், தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் த.பாலகிருஸ்ணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

பெயர்ப் பலகையை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் திரைநீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி.சி. ஆனந்தராசா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அடுத்து முதற் கணக்கை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் ஆரம்பித்து வைத்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து, வைப்பகக் கிளையின் செயற்பாடு தொடர்பாக அறிமுக உரையை தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சேமிப்பு கணக்கை ஆரம்பித்த சிறார்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கியதோடு ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்புச் செய்த இரண்டு சிறார்களுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் மாதம் தோறும் வைப்புச் செய்யும் மாணவர்களுக்கிடையே போட்டிகள் வைக்கப்பட்டு வெற்றியீட்டுகின்ற மாணவர்களுக்கு அன்றைய தினம் அவர்களின் பெயரில் பணம் வைப்புச் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வைப்பக பணிப்பாளர், வைப்பக மேலாளர் மற்றும் உறுப்பினர்கள், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், வன்னி வேளாண் சேவை முகாமையாளர், உதவி விவசாயப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வட்டக்கச்சி பங்குத்தந்தை, பெற்றோர் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர். (09)

# ஆரம்பப் பிரிவு பாடசாலையில் புதிய கட்டடத் திறப்பு விழா

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கு - வத்திராயன் பிரதேசத்தில் ஆரம்பப் பிரிவுப் பாடசாலைக்கான கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் வடமராட்சிக் கிழக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை உப அதிபர் திருமதி.மேரிவிக்டோரியா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப் பணியகத்தின் ஒருங்கிணைப்பாளரும், வேலைத்திட்டக் கண்காணிப்பாளருமான சுப்பிரமணியம், வடமராட்சிகிழக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் இளங்கோ மேரி, தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட முகாமைத்துவப் பிரிவைச்சேர்ந்த றோபோட் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கொடி, பாடசாலைக்கொடி ஏன்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, பாடசாலையின் கணினிப் பிரிவை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த மகாலிங்கம் சிவகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இரண்டாவது வகுப்பறையை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் வின்சன் திறந்து வைத்தார்.

மற்றைய வகுப்பறைகளை வடமராட்சி கிழக்கு சுனாமி வேலைத் திட்டப் பிரிவுப் பணிப்பாளர் யூட், வடமராட்சி கிழக்கு அபிவருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சுரேஸ், தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் ச.கோகிலவதனி ஆகியோர் திறந்து வைத்தனர்.

# கனகராயன்குளம் பிரதேசத்தில் விவசாயிகள் சங்கம நிகழ்வு

வட்டக்கச்சி—

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா மாவட்ட கால்நடை சுகாதார திணைக்களம், மாவட்ட கமக்கார அமைப்புகள் ஆகியவை இணைந்து நடத்திய விவசாயிகள் சாங்கம நிகழ்வு வவுனியா மாவட்ட கனகராயன்குளம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ம.சோதி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ஞானம், வவுனியா மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சிறிஸ்கந்தராசா கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் விவசாயிகள் தாம் கிராம, பிரதேச மட்டத்தில் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்துக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு கருத்துரைகளையும், விளக்கவுரைகளையும் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கா.ஞானம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் சம்பந்தப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகள் வழங்கினார்கள். இதன் போது விவசாயிகள் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றிக் கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கான விவசாய அறிவுப் போட்டியும் இடம்பெற்றது. இதில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து வெலிக்கந்தையில் வைத்து கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் அறிக்கையை ஜனாதிபதிக்கு வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர், மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி ஆகியோருக்கான மனு -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவராசா கையளித்தார். (09)



கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இரத்ததான அமைப்பின் மூலம் அந்தப் பகுதி மக்களால் இரத்ததானம் வழங்கப்பட்டது. இரத்ததானம் வழங்குவதற்காக கொடையாளியை மருத்துவர் பரிசோதிப்பதை முதலாவது படத்திலும், இரத்தம் வழங்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். -படம் அசிதன்

# தமிழீழ தேசிய இளைஞர் பேரவை புதிய நிர்வாகக்குழு தெரிவு

உருத்திரபுரம்—

உருத்திரபுரம் பிரதேச தமிழீழ தேசிய இளைஞர் பேரவைத் தெரிவு நிகழ்வு உருத்திரபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆசிரியை திருமதி. இ.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருள், இளைஞர் பேரவைப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து நிர்வாகக்குழுத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக ஜீவாகரன், உபதலைவராக இ.தர்சன், செயலாளராக விமல்ராஜ், உபசெயலாளராக கணேஷ், பொருளாளராக தனீஸ், உபகுழுவில் இ.பரஞ்சோதி, கந்தசாமி, இ.அசோக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் பேரவை பொறுப்பாளர், உருத்திரபுரம் பிரதேச பொறுப்பாளர் சுடர்விழி ஆகியோர் கலந்து கொண்டனர். (09)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

- திருக்குறள்

## நமது நோக்கு

# படுகுழியிலேயே தள்ளும்

ஜெனிவாவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை-போர் நிறுத்த உடன்பாட்டின் ஒரு திருத்தமே என்று அரச தரப்பு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருவது- சமாதான முன்னெடுப்புக்களை மீளவும் நெருக்கடியான கட்டத்துக்குள் தள்ளிக்கொண்டிருப்பதை உணர முடிகிறது

ஜெனிவாவில் இருந்து நாடு திரும்பிய அரச தரப்புப் பிரதிநிதிகள் - பேச்சுக்களின்போது காணப்பட்ட இணக்கப்பாடு போர்நிறுத்த உடன்பாட்டுத் திருத்தமாகவே அர்த்தம் கொள்ளப்படுவதாகக் கூறியிருந்தனர்.

இதற்கு உடனடியாகவே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்த- அரசாங்கப் பேச்சுக் குழுவின் அங்கத்தவரான சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா மீண்டும் அதேகருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இது, விடுதலைப் புலிகளைப் பெரிதும் சீற்றமடையச் செய்திருப்பதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை. ஏனெனில், உண்மையற்றதொன்றை அரசதரப்பு இப்படி வலியுறுத்தி வருவது ஒன்றும் ஆக்கபூர்வமான செயலுக்கானதல்ல என்பதை மட்டும் உணரமுடிகிறது.

ஏதோ ஒரு உள்நோக்கத்துடன்தான் அரச பேச்சுக் குழுவிலுள்ள எச்.எல்.டி.சில்வா போன்றவர்கள் இவ்வாறு கூறிவருகின்றனர்.

எச்.எல்.டி.சில்வா- 1985இல் ஜே.ஆர்.அரசுக்கும், தமிழ் போராளி இயக்கங்களுக்கும் இடையில் திம்புவில் நடந்த பேச்சுக்களில் பங்குபற்றிய, சிங்கள கடும் போக்காளர்.

திம்பு பேச்சுக்களை குழப்பியடித்த குழுவின் முக்கியஸ்தரான எச்.எல்.டி.சில்வாவை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேடிப்பிடித்துக் கொண்டு வந்து சேர்த்தமைக்குக் காரணம் - இப்படிப்பட்ட குதர்க்க வேலைகளுக்கா? என்ற சந்தேகம் எழுகிறது.

ஜெனிவா பேச்சு மேசையில், தனது சட்டவிற்பன்னத்தையோ, வாதத்திறனையோ காட்டமுடியாமல் ஆடி அடங்கிப் போயிருந்த எச்.எல்.டி.சில்வாவும், அவரது பரிவாரங்களும் - நடக்காத ஒன்றை நடந்ததாகக் காட்டிக்கொள்ள முற்படுவது அபத்தமானதும், ஆபத்தானதுமானதொரு விளையாட்டாகவே கருத முடிகிறது.

இருதரப்புக் கூட்டறிக்கையை ஒரு பிரதான உடன்பாட்டின் அங்கமாகச் சேர்த்துக்கொள்ள எந்தச் சட்டத்திலும் இடமில்லை என்பதை தெரியாதவரல்ல எச்.எல்.டி.சில்வா.

ஆனால், அவர் சிங்கள கடும் போக்காளர்களைத் திருப்திசெய்யவும் - தமிழர் தரப்பை கொதித்தெழச் செய்து குழப்பியடிக்கவுமே இவ்வாறு நடந்து கொள்வதாகத் தெரிகிறது.

அதாவது- இது ஒரு திட்டமிட்ட சிங்கள பௌத்த பேரினவாத சதி என்றே கருதவேண்டியுள்ளது. ஏனென்றால், ஜெனிவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாடு நிச்சயமாக அரசதரப்புக்கு நெருக்கடியைக் கொடுத்து வருகிறது.

ஏதோ - சர்வதேச நிர்ப்பந்தமும், விடுதலைப் புலிகளின் இராஜதந்திர அணுகுமுறைகளும் அரச பேச்சுக் குழுவை நெருக்கடிக்குள்தள்ளி இணக்கப்பாட்டுக்கு வர நிர்ப்பந்தித்துவிட்டன.

இப்படிப்பட்ட சூழலில் இந்த இணக்கப்பாட்டை அமுல்படுத்துவதற்குத் தயங்கும் அரசதரப்பு- எப்படியாவது இந்த சமாதான முயற்சிகளை - விடுதலைப் புலிகளைக் கொண்டே குழப்பியடிக்க முயலும் திட்டமாகவே இதைக் கருதவேண்டியுள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டுத் திருத்தமென்று வைத்துக் கொண்டாலும், அதை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமை. ஆனால், அதை நிறைவேற்றாமல் வைத்துக் கொண்டு ஏதோ வார்த்தைகளால் விளையாடி - சமாதான முன்னெடுப்புக்களை நாசப்படுத்தப் பார்க்கிறது.

உள்நாட்டில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் இந்தப் பருப்பு வேகலாம். ஆனால், சர்வதேச சமூகத்தின் கண்களுக்கு முன்பாக நடந்த ஜெனிவாப் பேச்சுக்களைக் குழப்பியடிக்கவோ, தவறான அர்த்தங்களைக் கற்பித்து வீண் பிரச்சினையைக் கிளப்புவதோ, இலங்கை அரசாங்கத்தைப் படுகுழியில் தான் தள்ளிவிடும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




அரசின் பல்டி...?

# படையினரின் நேரக்கட்டுப்பாட்டால் கடற்தொழிலாளர்களுக்கு பாதிப்பு

சாவகச்சேரி

நாவற்குழி தெற்கு கைதடி, கோயிலாக்கண்டிப் பகுதிகளில் தொழிலில் ஈடுபடும் கடற்தொழிலாளர்கள் மீது படையினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையால், அந்தப்பகுதி கடற்தொழிலாளர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடி - நாவற்குழி தெற்குப் பகுதிகளில் கடற்தொழில் செய்துவரும் மீனவர்களை கடந்த காலங்களில் அதிகாலை 4 மணிக்கு கடற்தொழில் செய்ய அனுமதித்து வந்தனர்.

ஆனால், படையினர் தற்போது காலை 6 மணிக்கே தொழில் செய்ய அனுமதிப்பதால், தாம் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், காலை 6 மணிக்கு கடலுக்குச் சென்றால் மதியம் 12 மணிக்கே திரும்புவதால் தாம் பிடிக்கும் மீன்களை விற்பனை செய்ய முடியாதுள்ளதாகவும் கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன், இன்றுவரைக்கும் பாஸ் நடைமுறையுடனே கடலுக்குச் சென்று வருவதாகவும் தெரிவித்தனர். பாஸ் மற்றும் அடையாள அட்டை இல்லாதவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதடியிலுள்ள மகாவிஷ்ணு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் - கடற்தொழிலை நம்பி 166 குடும்பங்கள் வாழ்கின்றனர்.

எனினும், காலை 6 மணிக்கே கடற்தொழில் செய்ய அனுமதிக்கப்படுவதால் இவர்கள் தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைதடி துறை மற்றும் தனாங்கிளப்பு ஆகிய இரு இடங்களில் பாஸ் அனுமதி பெற்றால்தான் தொழிலுக்குச் செல்ல முடியும் என படையினர் கட்டுப்பாடு விதிததுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (த)

# ஒப்பந்தகாரர்கள் முன்வராமையால் கரவெட்டியில் கமநல சேவைகள் நிலையம் அமைப்பதில் தாமதம்

## நிக்கொட் அதிகாரி கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்

கரவெட்டியில் புதிதாக கமநல சேவை நிலையம் அமைக்க நிக்கொட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளபோதும், கட்டட ஒப்பந்தகாரர்கள் எவரும் முன்வராததால் கமநலசேவை நிலையம் அமைக்கும் பணிகள் தாமதமடைவதாக நிக்கொட் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

விவசாயிகளின் நலன் கருதி இந்தப் பகுதியில் கமநலசேவைகள் நிலையம் ஒன்றை அமைக்க நிக்கொட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கமநலசேவை நிலையம் அமைக்கவென பலமுறை நிக்கொட் நிறுவனத்தால் ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. எனினும், கட்டட ஒப்பந்தகாரர்கள் எவரும் கட்டடம் அமைக்க முன்வரவில்லை.

இதையடுத்து வடக்குக் - கிழக்கு மாகாண நிர்மாணிகள் சங்கத்திடம் இந்த நிலைமையைத் தெரியப்படுத்தி அவர்களிடம் ஒத்துழைப்பைக் கோரியுள்ளோம். அவர்களது ஒத்துழைப்புக் கிடைத்ததும் கரவெட்டியில் கமநல சேவைகள் நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகும்.

இதேவேளை, சண்டிலிப்பாயில் நிக்கொட் நிறுவனத்தால் கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இந்த கமநல சேவைகள் நிலையம் அமையவுள்ள காணி தற்போது மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தால் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது. ஆரம்பகட்ட வேலைகள் முடிவுற்றதும் இந்த வருட இறுதிக்குள் கமநல சேவைகள் நிலையம் கட்டி முடிக்கப்படும்.

சண்டிலிப்பாயில் அமையவுள்ள கமநல சேவைகள் நிலையத்துக்கென நிக்கொட் 9 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ரி)

# சமுர்த்தி முகாமையாளர் தடைதாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம்

சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2005 எதிர்வரும் ஜூன்மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவர் மூலமாக (மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம்) இணைப்பு செய்யப்பட்டு-அதனை மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலர் ஊடாக எதிர்வரும் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை, பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இந்தப் பரீட்சை இரு வினாப் பத்திரங்களைக் கொண்டதாகும். ஒரு வினாப் பத்திரத்துக்கான நேரம் 3 மணித்தியாலயங்களாகும். (ரி, 110)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஐந்தாவது புதிய மாடிக்கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நேற்றுக்காலை 10.30 மணியளவ[illegible]லைப்பீட பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து புதிய கட்டடத்தின் நினைவுக் கல்லை பேராசிரியர்கள் சு.மோகனதாஸ், பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்து, புதிய கட்டடத் தொகுதியையும் நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர்.

தொடர்ந்து கணினிக் கூடத்தை துணைவேந்தர் சு.மோகனதாஸும், பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

கணினிக் கூடத்தில் முதல் கணினியை விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் இயக்கினார்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உட்பட பீடாதிபதிகள், மதத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த,அ)

# இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்ட பாரிய இரத்தக் தட்டுப்பாட்டை அடுத்து - யாழ் .மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சம்மேளன அலுவலகத்தில் இரத்ததான நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடற்தொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த பலர் இரத்ததானம் செய்தனர்.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்ட பாரிய இரத்தக் தட்டுப்பாட்டை அடுத்து பல நோயாளர்களுக்கு இரத்தம் ஏற்றமுடியாமல் சிரமப்பட்டதுடன், அனுராதபுர வைத்தியசாலையில் இருந்து இரத்தம் எடுத்துவரப்பட்டதாகவும் தெரியவருகிறது. (த)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி? 03.03.2006 - 09.03.2006

| | | | |
|---|---|---|---|
| புத ராகு | சந் | செவ் | |
| சூ யுரே | 05ப 9-47<br>07மா 5-03 | இடப-சந்<br>மிது - சந் | சனி |
| சுக் நெப் | 09ப 1-50<br>09 பி.இ. 3-37 | கும் - புத<br>கட - சந் | |
| | | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் தென்படுகின்றன. குடும்பத்தில் நல்லுறவு பேணப்படும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். வருமானம் மிகச் சிறப்பாக இருக்கும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி வெற்றியளிக்கும். தேக சுகம் சிறப்பாக இருக்கும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் நினைத்தவாறு கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். கீழ் உத்தியோகத்தர்கள் கௌரவமாக நடந்துசொள்வர். சிலருக்கு பதவி உயர்வு தேடி வரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் வெகுசிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடியலாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும். வருமானம் பெருகும். மாணவர்கள் ஊக்கமும். சிறப்புச் சித்திகளும் பெறுவர்.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகாணும். தொடங்குங்கருமங்கள் அலைச்சலில் முடியுமே தவிர வெற்றியளிக்காது. வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். தேகசுகமும் அடிக்கடி தொந்தரவு கொடுக்கும். விவாக கருமங்கள் நிறைவேறாது . உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். சக ஊழியர்களுடன் விரோதங்கள் தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. நிதி நெருக்கடிகள் நிம்மதியைக் கெடுக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். எடுத்த வேலைகளை உரிய காலத்தில் முடிக்க முடியாமல் தவிப்பர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கக் குறைவு ஏற்படும். பரீட்சை பலன் தராது.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இனசனக்கொண்டாட்டங்கள் சந்தோஷத்தை தரும். பணவருவாய் அதிகரிக்கும். புத்திரர்களால் அவ்வப்போது மகிழ்ச்சியும், உதவியும் கிடைக்கும். பெரியோர்களின் உதவி இருந்து கொண்டிருக்கும். மங்கள கருமங்கள் மகிழ்ச்சியுடன் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அபிலாஷைகள் நிறைவேறும். கருமங்களை எளிதாகச் செய்யக் கூடிய வசதிகள் கிடைக்கும். அதிகாரிகளின் பாராட்டுக்களும் கிட்டும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகி அதிகலாபம் சேரும். பழைய கடன் நிலுவைகள் கைக்கு வந்து சேரும். தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமையும், புதிய தொழில் வாய்ப்புக்களும் கிட்டும். ஒப்பந்த வேலைகளில் நல்லைாபம் கிடைக்கும். மாணவர் கல்வியில் ஊக்கமும், பரீட்சையில் சிறப்பும் பெறுவர். சிலருக்கு தொழில் வாய்ப்புக் கிட்டும்.

## கடகம்

( புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு இருந்தாலும் இடையிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொடங்குங் கருமங்கள் தடை தாமதத்தின் மேல் நிறைவேறும். புத்திரர்களால் பெரிய உதவிகள் கிடையாது. பண வருவாய் ஓரளவு திருப்தி தரும். தேக சுகத்தைப் பேணவேண்டும். மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல்கை கூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். அதிகாரிகளின் போக்குக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வியாபாரிகளுக்கு நஷ்டம் இல்லாவிட்டாலும் வியாபாரம் சோபிக்காது. வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்களுக்கு உழைப்புக் கேற்றலாபம் கிடையாது. கடின முயற்சி தேவை. வருவாய் மட்டுப்படுத்தப்படும். மாணவர்களுக்கு கூடியளவு ஊக்கமும் முயற்சியும் தேவை.

## சிங்கம்

( மகம், பூரம், உத்தரம்1)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். இனபந்துகளின் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும். புத்திரர்களால் உதவி உண்டு. பண வருவாய் திருப்தியாக இருக்கும். தொடங்குங் கருமங்கள் நன்மையாகவே முடியும். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். அலுவலகக் கருமங்கள் எளிதாக நடக்கும். போக்குவரத்துக்களுக்கு வசதியேற்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். முதலீடுகள் விற்பனையாகும். வங்கி மூலம் நிதி உதவிகள் கிடைக்கும். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்துக் கொண்டிருக்கும். வருமானம் பெருகும். மாணவர்கள் கல்வியில் முன்நிலை வகிப்பர். உயர் கல்வி கற்கும் வாய்ப்புகள் உண்டு.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சச்சரவுகள் இருந்து கொண்டேயிருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். எப்படித் தொழில் செய்தாலும் ஏற்ற ஊதியம் கிடைப்பது கடினம். குடும்பச்செலவுகளும் அபரிமிதமாக இருக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேகசுகமும் இடையிடையே பாதிப்படையும். மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக ஊழியரின் உதவி குறையும். மேலதிகாரிகளும் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். வாடிக்கையாளர்களைத் தவிர்த்தல் நன்று தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். உழைப்புக் கேற்ற வருவாய் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். விளையாட்டுக்களில் கவனம் செலுத்துவர்.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். எனினும் கருத்து வேற்றுமைகளும், நிம்மதிக்குறைவும் இருந்துகொண்டிருக்கும். நண்பர்கள் உறவினர்கள் சில சந்தர்ப்பங்களில் தொல்லையை உண்டாக்குவர். பணவரவு ஓரளவு திருப்திதரும். புத்திரர்களும் சொற்கேளார். மங்கள கருமங்கள் தாமதத்தின் பின் நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புகள் அதிகமானாலும், சக உதவியுடன் சமாளிக்கலாம். எப்படியும் நிம்மதி குறைவாகவே இருக்கும். மேலதிகாரிகளின் போக்குக்கேற்ப நடத்தல் நன்மைதரும். வியாபாரிகளுக்கு தொழிலில் மந்தநிலை ஏற்படும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்பு மத்திமமாகும். பிரயாசை கூடுதலாக இருக்கும். மாணவர்கள் ஊக்கத்துக் கேற்றவாறு பரீட்சைகளில் சித்தி பெறுவர்.

## விருச்சிகம்

( விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு நற்பலன்கள் காட்டும். குடும்பநிலை மகிழ்ச்சியாக இருக்கும். பணவருவாய் சிறப்பாக அமையும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாடுகளிலிருந்தும் நற்செய்தி கிட்டும். கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். தேகசுகம் சிறப்பாக அமையும். மங்கள கருமங்கள் மனம் போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு சிறப்பாக இருக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பிரமாதமாக இருக்கும். முதலீடுகளுக்கும் நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். பரீட்சையில் நற்பெறுபேறு கிடைக்கும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)



தனுசுராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக அமையும். உறவினர்களாலும், நண்பர்களாலும் உதவிகள் கிட்டும். புத்திரர்களால் மன நிறைவு ஏற்படும். குடும்ப வருமானம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிட்டும். விரைவில் ஊதிய உயர்வு பெறுவார்கள். வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் நல்ல வருமானம் கிட்டும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் கிட்டும். ஒப்பந்த வேலைகளில் லாபம் கிட்டும். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி பெறுவர்.

## மகரம்

( உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் சண்டை, சச்சரவுகள் இருக்கும். எடுத்த கருமங்கள் நிறைவேறாது. மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். தேகசுகக் குறைவால் வைத்தியச்செலவு அதிகரிக்கும். மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்கள் வீண் பழி கேட்க நேரும். வேலைப் பொறுப்புகளும் அதிகரிக்கும். சிறு விடயங்களிலும் அதிகாரிகள் குற்றம் காண்பர். வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தடைப்படும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் குறையும். இயந்திர சாதனங்கள் ஒத்துழைக்க மறுக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் விரக்தியும், பரீட்சைகளில் ஏமாற்றமும் ஏற்படும்.

## கும்பம்

( அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு ஏற்படும். புத்திரர்களால் பெரிய உதவிகள் ஏற்படாது. பணவருவாய் ஓரளவு திருப்தியாக இருக்கும். தொடங்குங் கருமங்கள் தாமதத்தின்மேல் வெற்றியளிக்கும். மங்கள கருமங்களும் இழுபறிப்பட்டே முடிவுக்கு வரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைக் பொறுப்புகள் அதிகமானாலும், சக ஊழியருடன் சரிசெய்து கொள்வர். அதிகாரிகளுடைய போக்குகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடைபெறும். அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். வெகுசிரமத்தின்மேல் லாபமுண்டு. மாணவர்கள் தமது ஊக்கத்துக் கேற்ப சித்திபெறுவர்.

## மீனம்

( பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடக்கும். நண்பர்கள், உறவினர்களால் உதவி உண்டு. பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாட்டிலிருந்து உதவிகள் கிடைக்கலாம். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் மனம்போல் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை கிட்டும். பிரயாணங்கள் இலகுவாகும். சிலருக்கு பதவி உயர்வுக்கான சிபாரிசுகள் செய்யப்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். முதலீடுகளால் பணம் சேரும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிட்டும் வருவாய் அதிகரிக்கும். மாணவர்கள் நல்ல ஊக்கத்துடன் காணப்படுவர். பரீட்சையில் சித்தியும், உயர் கல்வி வாய்ப்புகளும் பெறுவர்.

# யாழ்.குடாநாட்டில் மின்தடை அடிக்கடி ஏற்படுவதற்கு யார் காரணம்?

யாழ்.குடாநாட்டில் பல ஆண்டுகளாக அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் அரசின் மாற்றாந் தாய் மனப்பான்மையா? அல்லது இங்குள்ள மின்சாரசபை தட்டிக்கேட்கத் தயங்கும் செயலற்ற தன்மையா? என்பதை அறிய விரும்புகிறோம். காரணம் எதுவெனினும் மக்களின் அவலநிலை முற்றாக அகற்றப் பட வேண்டும்.

யாழ்.குடாநாட்டில் மின்தடை பல ஆண்டுகளாக ஏற்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டி நாம் நாடாளுமன்றத்தில் பல தடவை எடுத்துரைத்துள்ளோம். அத்தோடு நாடாளுமன்றக் கட்டடத்தில் மாதந்தோறும் நடைபெறும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களிலும் இந்தப் பிரச்சினை பற்றி பல தடவை சுட்டிக்காட்டி விளக்கியுள்ளோம். வழமைபோல் எம்மையாழும் சிங்கள அரசு எமக்கு நிதி ஒதுக்குவதை மறைக்கும் நோக்குடன் தம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இங்குள்ள மின்சாரசபை மீது பழி சுமத்த முயல்வதை நாம் கவனிக்கத் தக்கதாய் இருந்தது.

இந்த அடிப்படையில்தான் சுன்னாகத்தில் இயங்குகின்ற மின் சாரசபையில் பணிபுரியும் உயர் அலுவலர்கள் அனைவருடனும் தொடர்பு கொண்டு பல தடவை இந்த நிலை பற்றிய விபரம் பெற முயன்ற போது அவர்களிடம் இருந்து தெட்டத் தெளிவான பதில் கிடைக்காதது வருந்தத்தக்கது. எந்தக் காரணத் தாலோ இங்குள்ள உண்மை நிலையை எடுத்துரைக்க அவர்கள் தயங்குவது - அவர்களின் அஞ்சி அஞ்சிச்சாகும் நிலையை எடுத்துக்காட்டுகிறது. ஒரு நிறுவனத்தின் உயர் பொறுப்பாளர்கள் தம் நிறுவனத்தில் நிலவுகின்ற சீர்கெட்ட நிலையைத் திருத்த வேண்டும்.

திருத்த முடியாத நிலை யில் எமக்கு உண்மையை விளக்கினால்தான் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் மக்களின் தேவையை உணர்ந்து நாம் செயற்பட முடியும்.

**உண்மை களை வெளி யிடுவதில் தயக்கம் ஏன்?**

பல ஆண்டுகளாக யாழ். குடாநாட்டில் மின்தடை அடிக்கடி ஏற்பட்டுக் கொண் டிருப்பதை உணர்ந்துள்ள நாம் - அதற்கான காரணங்களை அறிய முயன்ற போது தயங்கித் தயங்கித் தான் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. காங்கேசன் துறையில் இருக்கின்ற குளிரூட்டும் கூட்டுநிலையத்தில் இயங்குகின்ற இயந்திரங்கள் மிகப் பழையதாக இருப்பதால், அவை அடிக்கடி பழுதாகுகின்றன.

அத்தோடு போதிய மின்வலு வழங்கும் பொறிகள் இந்தக் கூட்டு நிலையத்தில் இல்லாமையும் இந்த அவலநிலைக்குக் காரணம் என்று அறிகிறோம். புதிய பொறிகளைப் பெறுவதற்கு யாழ். மின்சாரசபை எத்தகைய நடிவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதை நாம் அறிய முடியாமல் இருக்கின்றது.

**இரவில் மின்தடை களவு, கொலை, விபத்துக்களுக்கும் வழிவகுக்கும்.**

மின்தடை அடிக்கடி ஏற்படுவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மின்தடை பகலிலும் ஏற்படுகின்றது, இரவிலும் ஏற்படுகிறது. பகலில் ஏற்படுகின்ற போது கணினி உட்பட இலத்திரனியல் சாதனங்கள் அடைத்து செயலற்றுப் போகிறது. நிர்வாகம் நிர்மூலமாகிறது. இரவில் மின்தடை ஏற்படுகின்ற போது கள்வர்கள் நடமாட்டம் பெருகுகிறது. களவுகளும் கொலைகளும் பெருகியுள்ளதாக எமக்குச் செய்திகள் பல கிடைத்துள்ளன.

இரவில் சடுதியாக மின் தடை ஏற்படுவதால், பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அண்மையில் சங்கானையில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கணவனும், மனைவியும் விபத்தில் சிக்க - மனைவி அந்த இடத்திலேயே உயிரிழக்க கணவன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவை எமக்குத் தெரிந்த செய்திகள். இரவில் ஏற்படும் சடுதியான மின் தடையால் எமக்குத் தெரியாமலேயே பல விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றைக் கணக்கிடுவது கடினம்.

**மின்தடை - மருத்துவமனையில் நோயாளருக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது.**

மின்தடை ஏற்படுவதால் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை தடைப்பட்டு நோயாளிகள் பெரும் ஆபத்துக்கு உள்ளாகிறார்கள். அரச மருத்துவமனைகளில் மின்பிறப்பாக்கிகள் இயங்குவதால் அறுவைச் சிகிச்சைக்கு ஆபத்து இல்லை எனச் சிலர் எம்மைத் தேற்ற முயலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் மருத்துவமனை மின்பிறப்பாக்கிகளில் தான் தங்கியிருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்க முடியாது. அரச மருத்துவமனையில் இருக்கிற இந்த வசதி தனியார் மருத்துவமனையில் உண்டா என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனவே மருத்துவமனைகள் இருளில் மூழ்குவதைத் தடுக்கின்ற முறையில் மின்வலு இயங்கியே ஆகவேண்டும்.


**மின்தடை மாணவ மாணவிகளின் கற்றலுக்குத் தடை**

மின்தடையால் பொது மக்கள் பாதிக்கப்படுவது ஒரு புறம் இருக்க பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பயிலுகின்ற மாணவ மாணவிகளின் நிலை என்ன? அவர்கள் எப்படி நூல்களையோ, சஞ்சிகைகளையோ, குறிப்பேடுகளையோ கற்க முடியும். இவற்றை முறையாகப் பயில முடியாத நிலையில், குறிப்பெடுக்க முடியாத நிலையில் அவர்களுடைய கற்றல் நிலை என்ன? அவர்கள் வாழ்வில் எவ்விதம் முன்னேறுவர்.

மேற்குறித்த விடயங்கள் அனைத்தையும் ஒட்டி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இங்கு நிலவுகின்ற மின்தடையை நீக்க நாடாளுமன்றத்தில் மாதந்தோறும் நடைபெறுகின்ற ஆலோசனைக் கூட்டங்களிலும் கேள்விகளை எழுப்பி யாழ். குடாநாட்டில் நிலவுகின்ற மின் தடைக்கு ஒரு முடிவு கட்ட உறுதி பூண்டுள்ளோம். எனினும். இந்த அவல நிலையை நீக்க யாழ். மின்சார சபையும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். யாழ். மக்கள் விழிப்போடு இருந்து எமக்குப் பக்கதுணையாக விபரங்களைத் தருதல் எம் பணி பயன்பெறத் துணைநிற்கும்.

மா.க.ஈழவேந்தன்

# பங்களாதேஷுடனான டெஸ்ட்; வெற்றியை நோக்கி இலங்கை!







சிட்டகொங் —

இலங்கை - பங்களாதேஷ் அணி களுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் தொடரின் மூன்றாம் நாளான நேற்று முதலாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் பங்களா தேஷ் அணியை 181 ஓட்டங்களுக் குள் சுருட்டியது.

தனது முதலாவது இனிங்ஸில் 315 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக் களை இழந்திருந்த இலங்கை அணி நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடி யது.

57 ஓட்டங்களைப் பெற்றிருந்த சமரவீரவும் 8 ஓட்டங்களைப் பெற் றிருந்த பண்டாரவும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத் திலேயே இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிய ஆரம்பித்தன.

இதன்படி 43 பந்துகளில் 4 பவுண் டரிகள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்றிருந்த சமரவீர ஹுசைன் வீசிய பந்தை ஜவீட் ஓமரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் நேற்று ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றிருந்தார்.

இவரை தொடர்ந்து களமிறங்கிய பெர்னாண்டோ 17 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 6 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலையில் ஹுசைன் வீசிய பந்தை நபீஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து முரளீதரன் களமிறங் கினார். இவர் 7 பந்துகளில் ஒரு பவுண்டரியுடன் 5 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஹுசைன் வீசிய பந்தை நபீஸிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.

இறுதியாகக் களமிறங்கிய மலிங்க வந்த வேகத்திலேயே ரன் அவுட்டாகி வெளியேறினார்.

8 ஓட்டங்களுடன் நேற்றுக் கள மிறங்கிய மலிங்க பண்டார - 52 பந்து களில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 19 ஓட்டங்கறைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்காதிருந்தா ர்.

பந்துவீச்சில் ஹுசைன் 4 விக் கெட்டுக்களையும் முகமட் ரபிக், எனா முல் ஹக் ஆகியோர் தலா 2 விக்கெட் டுக்களையும் சயீட் ரசல் ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து தனது இரண் டாவது இனிங்ஸை பங்களாதேஷ் அணி ஆரம்பித்தது.

ஜவீ[illegible] ஓமரும் நபீஸ் இக்பாலும் களமிற[illegible]கினர். இந்த ஜோடியால் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடிய வில்லை.

இதன்படி 41 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 6 ஓட்டங் களைப் பெற்றிருந்த நபீஸ் இக்பால் - பெர்னாண்டோ வீசிய பந்தை சங்கக் காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந் தார்.

அடுத்து பசார் களமிறங்க - மறுபுறத் தில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஜவீட் ஓமரை எல்.பி.டபிள்யு முறை மூலம் பெர்னாண்டோ வெளியேற்றி னார். இவர் 58 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலான 31 ஓட் டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து அஷ்ரபுல் களமிறங்க - மறுபுறத்தில் 28 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 12 ஓட்டங் களைப் பெற்றிருந்த பசாரை எல்.பி. டபிள்யு முறை மூலம் மலிக்க பண் டார ஆட்டமிழக்கச் செய்தார்.

அடுத்து நபீஸ் களமிறங்க - மறு புறத்தில் 3 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றிருந்த அஷ்ர புல் - முரளீதரன் வீசிய பந்தை தரங்கவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து மசூட் கள மிறங்கினார். 55 ஓட்டங்களுடன் ஒரு பவுண்டரி அடங்கலாக 15 ஓட் டங்களைப் பெற்றிருந்த இவர் - முரளீ தரன் வீசிய பந்தை டில்சானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கபாலி களமிறங்க - மறுபுறத்தில் நபீஸின் விக்கெட்டை யும் முரளீதரன் கைப்பற்றினார்.

தொடர்ந்து ரபீக் களமிறங்க கபாலி யின் விக்கெட்டையும் முரளீதரன் வீழ்த்தினார்.

மொகமட் ரபீக் களமிறங்க - ஓட்டமெதனையும் பெறாத ஹுசைனை மலிங்க பவிலியன் அனுப்பினார்.

அவரைத் தொடர்ந்து எனாமுல் ஹக் களமிறங்க அவரையும் முரளீ தரன் வீழ்த்தினார்.

இறுதியாக சயீட் ரசல் களமிற கினார். இதன்பின் 49 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட் டங்களைப் பெற்றிருந்த ரபிக்கின் விக் கெட்டையும் முரளீ கைப்பற்றினார்.

இறுதியில் 181 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணி சகல விக்கெட் டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் - சிறப்பாக வீசி முரளீ தரன் 6 விக்கெட்டுக்களையும் பண்டார, பெர்னாண்டோ ஆகியோர் தலா 2 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 163 ஓட்டங்கள் பெற் றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி நான் காம் நாள் ஆட்டநேர முடிவில் விக் கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைப் பெற்றது.

வன்டோட் 6 ஓட்டங்களுடனும் தரங்க 19 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காதிருந்தனர்.

## நாக்பூர் டெஸ்டில் இந்திய அணி 1/136









நாக்பூர் —

இந்திய - இங்கிலாந்து அணிகளுக் கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இங்கிலாந்து அணி 393 ஓட்டகளுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து ஆடிய இந்திய அணி தனது முதலாவது இனிங்ஸில் நேற்றைய ஆட்டநேர முடிவில் 1 விக் கெட் இழப்புக்கு 136 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக நேற்றுமுன்தினம் 7 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட் டங்களைப் பெற்றிருந்த இங்கிலாந்து அணி நேற்று தொடர்ந்து ஆடியது.

53 ஓட்டங்களைப் பெற்றிருந்த கொலிங்வூட்டும் ஓட்டமெதையும் பெறாதிருந்த ஹொகாட்டும் ஆட்டத் தைத் தொடர்ந்தனர்.

இதில் ஹொகாட் 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சிறிசாந்த் வீசிய பந்தை டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹர் மிசன் 42 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற் றிருந்தபோது ஹர்பஜன் வீசிய பந்தை டோனி ஸ்ரம்ப் செய்ததால் ஆட்டமிழந் தார்.

இறுதியாகக் களமிறங்கிய பன்சர் - 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலை யில் சிறிசாந்தின் பந்தில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

13 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 134 ஓட்டங்களுடன் கொலிங்வூட் இறுதிவரை ஆட்டமிழக் காதிருந்தார்.

பந்துவீச்சில் சிறிசாந்த் 4, பதான் 3, ஹர்பஜன்சிங் 2, கும்ளே ஒரு விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸை இந்திய அணி ஆரம்பித் தது.

வசீம்ஜபாரும் ஷேவாக்கும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஆனால் இந்த ஜோடியால் நிலைத்து நின்று ஆட மு[illegible]ல்லை. இதன்படி அணி யின் ஸ்கோர் 11 ஆக இருக்கையில் 2 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த ஷேவாக் - ஹொகாட் வீசிய பந்தை பீற்றர்ஸனிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.

அடுத்து ஜபாருடன் அணித் தலை வர் ராகுல் ராவிட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி மிகவும் நிதானமாக - நிலைத்துநின்று ஆடியது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி ஒரு விக் கெட்டை மட்டும் இழந்து 136 ஓட்டங் களைப் பெற்றது.

வசீம் ஜபார் 170 பந்துகளில் 13 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங் களுடனும் ராவிட் 114 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந்த ஜோடி 2 ஆவது விக்கெட் டுக்கு இணைப்பாட்டமாக 125 ஓட்டங் களைப் பெற்றிருந்தது.

## விளையாட்டு

## கங்கூலியின் தயவினால்தான் பயிற்சியாளர் பதவி கிடைத்தது

### என்கிறார் கிரேக் சப்பல்

லண்டன் —

இந்திய அணியின் முன்னாள் கப் டன் கங்கூலியின் தயவாலும், ஆதர வாலும்தான் எனக்கு பயிற்சியாளர் பொறுப்புக் கிடைத்தது. அதற்குக் கைமாறாக கங்கூலியை அணி யில் தக்கவைக்க என்னால் எதுவும் செய்ய முடியவில்லை என கிரேக் சப்பல் தெரி வித்தார்.

இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் கார்டியன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியிருப்பதா வது -

அணியின் வீரர் என்ற முறையி லும் கப்டன் என்ற வகையிலும் கங் கூலியால் உருப்படியாக எதுவும் செய் யமுடியவில்லை. இதுதான் எனக் கும் அவருக்கும் இடையே பிரச்சினை உருவாகக் காரணம்.

சில ஆண்டுகளுக்கு முன் துடுப் பாட்டம் குறித்து சில ஆலோசனைக ளைக் கேட்க கங்கூலி என்னிடம் வந் தார். அப்போதிலிருந்து நாங்கள் நண் பர்களாகி விட்டோம். ஆனால், பயிற்சி யாளராக நான் நியமிக்கப்பட்டதும் நட்பில் விரிசல் வந்துவிட்டது.

பயிற்சியாளராக ஜோன் ரைட் இருந்த போது கங்கூலியின் ஆட்டத் துக்கெல்லாம் தாளம் போட்டார். அதுபோல் நானும் இருப்பேன் எனக் கங்கூலி தவறாக நினைத்து விட்டார்.

கப்டன் பதவியிலிருந்து விலகு மாறு கங்குலியை நான்தான் கேட் டுக்கொண்டேன் . அவரது நன்மைக் காகத்தான் இதைச்செய்தேன்.

கங்கூலியின் கப்டன் பதவி பறி போனதும் எனக்கெதிராக அவரது ஆதரவாளர்கள் பல போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ஆனா லும் நான் தெளிவானவன், நேர்மை யானவன், உண்மையானவன். ஆகவே எதைப் பற்றியும் கவலைப்படு வதில்லை. நான் எடுத்துக்கொண்ட பணியில் சிரத்தையுடன் இருப்பேன்.

கிரிக்கெட் வீரர் மீது ரசிகர்களுக்கு இருக்கும் ஈர்ப்பு அளவிட முடியாதது. விமானநிலையங்களுக்குச் செல்லும் போதெல்லாம் ஏராளமான ரசிகர்கள் எங்களைப் பார்க்க வருவதைக் காண்கிறோம்.

வெற்றிகரமான கிரிக்கெட் வீரர் களைத் தொட்டுப் பார்க்கவும், அவர் களுடன் புகைப்படம் எடுத்துக்கொள் வதையும் ரசிகர்கள் வாழ்வின் பெரு மையாக கருதுகிறார்கள்.

ரசிகர்களின் எதிர்பார்ப்பை ஆட்டத் தில் நிறைவேற்றவேண்டாமா எனத் தெரிவித்தார்.

## கரப்பந்தாட்ட போட்டி

கோப்பாய் கோட்டமட்ட கரப்பந்தாட் டப்போட்டிகள் நாளைகாலை 8.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல் லூரியில் நடைபெறவுள்ளது

இதில் கலந்து கொள்ளும் அணி களைத் தயார்நிலையில் இருக்குமாறு கோப்பாய் கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் த.சிவகுமார் தெரிவித் தார். (12)

## தடகளப் போட்டி

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை கோட்ட மட்டத் திலான தடகளப் போட்டிகள் இன்றும், நாளையும் மகாஜனக் கல்லூரி மைதா னத்தில் நடைபெறவுள்ளதாக தெல்லிப் பளை கல்விக் கோட்ட அதிகாரி கைலா நாதன் தெரிவித்தார். (72)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விபத்து நடந்த இடத்தில் நின்ற படையினரை ஆஜர்படுத்துக!

## இராணுவ அதிகாரிக்கு நீதிவான் பணிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். கன்னாதிட்டிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தின்போது - சம்பவ இடத்தில் நின்றிருந்த இராணுவத்தினரை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு 512 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரிக்கும், இராணுவப் பொலிஸாருக்கும் யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கன்னாதிட்டிச் சந்தியில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் வாகனமும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது வாகனத்திலிருந்து இறங்கிய இராணுவத்தினர் சிலர் அந்த இடத்திலிருந்து தலைமறைவாகியதாக செய்திகள் வெளியாகின.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றபோது -வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சாரதிதான் வாகனத்தைச் செலுத்திய போது விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அடுத்து பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி - குறித்த வாகனத்தை இராணுவத்தினர்தான் ஓட்டிச்சென்றனர் என்றும், குறித்த சாரதி வாகனத்தைச் செலுத்தவில்லை என்றும் தெரிவித்ததுடன் சாரதியை விசாரணைக்குட்படுத்தினார்.

இதன் பின்னர் குறித்த சாரதிதான் வாகனத்தைச் செலுத்தவில்லை என ஒப்புக்கொண்டதையடுத்து, விபத்து நடைபெற்ற சமயம் சம்பவ இடத்தில் நின்றிருந்த இராணுவத்தினரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு யாழ். மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். (நி)

# ஹெல உறுமய, ஜே.வி.பிக்கு பேச்சுக்குழுவினர் விளக்கம்!

கொழும்பு —

ஜெனிவாப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அரசாங்கப் பேச்சுக் குழுவினர் - ஜாதிக ஹெலஉறுமய, ஜே.வி.பி கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து ஜெனிவாவில் நடைபெற்ற புலிகளுடனான பேச்சுக்கள் குறித்து விளக்கமளிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாப் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட இணக்கம் குறித்து இந்தக்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் - இந்தக்கட்சிகளை சந்தித்து பேச்சுக்கள் குறித்து தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கப் பேச்சுக்குழுவினருக்கு உத்தரவிட்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது என்ற இணக்கப்பாடானது- ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டுக்கு எதிரானது என இந்தக் கட்சிகள் குற்றம் சாட்டி இருந்தன. இந்தக்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டை கூட்டவுள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து ஜெனிவாவில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக இந்த மாநாட்டில் கட்சிகளுக்கு விளக்க மளிக்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா சென்ற குழுவினரால் உடன்பாட்டை திருத்த முடியாது!

## அரசின் பிரசாரம் சுத்தப் பொய் என்கிறது ஐ.தே.க

கொழும்பு —

2002ல் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தம்செய்ய வேண்டுமானால் அதில் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ கைச்சாத்திடவேண்டும்.

ஜெனிவாப் பேச்சுக்களில் பங்கேற்ற அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு இந்த உடன்படிக்கையை திருத்தம் செய்வதற்கு எந்த அதிகாரமும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

முன்னாள் பிதமர் ரணில் விக்கிரமசிங்கவால் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை திருத்த வேண்டுமாயின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அல்லது பிரதமர் கைச்சாத்திடவேண்டும். ஜெனிவா சென்ற குழுவினரால் இதை மாற்றியமைக்க முடியாது.

உடன்படிக்கை திருத்தப்பட்டது என்பது பொய்யானது என்பது இதன் மூலம் உறுதியாகியுள்ளது. கடந்த தேர்தலின்போது போர்நிறுத்த உடன்படிக்கையை கிழித்தெறிவதாகவும், ஆட்சிப்பொறு ப்பேற்றபின்னர் திருத்தப் போவதாகவும் ஆளும் கூட்டணியினர் கூறினர்.

முன்னர் கூறியபடி மூடி மறைப்பதற்காகவே திருத்தம் செய்துள்ளதாக தெரிவித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதியுதவிகளில் அரசு முறைகேடு; ஜப்பானிய அரசு குற்றச்சாட்டு!

கொழும்பு —

பல மில்லியன் டொலர் நிதியுதவிகளை எவ்வாறு பாவிப்பது என்பதில் இழுபறிகளையும், இழுத்தடிப்புகளையும் அரசு திட்டமிட்டு மேற்கொள்வதன் மூலம்- கடும் நிதி மோசடி நடைபெற்று, நிதி சூறையாடப்படுகிறது என்று ஜப்பான் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ சூடா- ஏற்கனவே ஜப்பான் வழங்கிய பாரிய நிதியுதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படாததுடன், மக்களின் நலன்கள் தொடர்பான எந்த விடயங்களுக்கும் இந்த நிதி சரியாகப்பயன்படுத்தியதை அரசு உறுதிசெய்யவில்லை என்றும் குற்றம்சுமத்தினார்.

இதுவரை வழங்கப்பட்ட பாரிய நிதியுதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன, அல்லது இதுவரை பயன்படுத்தாத நிதி யாரிடம் எங்கே உள்ளது என்ற விபரங்களை அரசு தெளிவாக வழங்கவேண்டிய தேவையுள்ளது.

எதிர்கால நிதியுதவிகள் அனைத்தும், கடந்த கால அரசுகளின் நிதிப் பாவனை தொடர்பான விபரங்களைக்கருத்தில் கொண்டே முன்னெடுக்கப்படும் என்ற நிபந்தனையையும் அவர் முன்வைத்தார்.

1991ஆம் ஆண்டு மின்சக்தி நிலையமொன்றை அமைப்பதற்கான பாரிய நிதியுதவி வழங்கப்பட்டபோதும் - 14 ஆண்டுகளாக இலங்கை அரசு அந்தத்திட்டத்தை இழுத்தடித்ததை சுட்டிக்காட்டியதுடன், 2004 ஆம் ஆண்டு சுனாமி அழிவுகளின் போது வழங்கப்பட்ட பாரிய நிதியுதவிகள் எதுவும் சரியான முறையில் திட்டமிட்டு பயன்படுத்தப்படவில்லை.

சுனாமிக்குப்பின்னர் உலகநாடுகள் வழங்க முன்வந்த 3.3 பில்லியன் டொலர் நிதியுதவி கூட இதன் காரணமாக முடங்கிக்கிடப்பதாகக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் ஜப்பான் தொடர்ந்தும் இலங்கைவளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்குத் தயாராக இருக்கின்ற போதிலும், முன்மொழியும் திட்டம் குறிப்பிட்ட காலத்துக்குள் முழுமையான நிதியைப்பயன்படுத்தி நேர்மையாக முன்னெடுக்கப்படும்என்ற உறுதிமொழியை இலங்கை அரசு தரும் பட்சத்தில் மட்டுமே அவை சாத்தியமாகும் என்றும் தெளிவாக விளக்கமளித்தார்.

அத்துடன், பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இரு தரப்பினரும் நேர்மையாக நிரந்தர சமாதானத்துக்காக செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## இராணுவ...

பாடசாலைக்கு முன்பாகவுள்ள காவலரண்களில் இருக்கும் படையினரால் மாணவர்களும், ஆசிரியர்களும் இம்சைப்படுத்தப் படுகின்றமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற போதிலும் - இது குறித்து இராணுவத் தளபதிகளுடனான சந்திப்பில் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மௌனம் சாதித்ததாக தெரியவருகிறது.

அதேவேளை, குடாநாட்டில் மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் கிடைப்பதில்லை என்றும், அதனைப் பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என படைத்தளபதிகளிடம் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டதாக தெரியவருகிறது. (அ)

## பாதகமான அரசியல்...

மாற்றுவது என்பதுதான் எமது அரசியல்.

எமக்கெதிராக இன்று என்ன பாதகமான விடயங்கள் உள்ளன எனப் பாருங்கள். தமிழ் தேசம் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. எது சாதகமாகவுள்ளது. வன்னி மட்டும் சுதந்திரமாகவுள்ளது.

எங்கள் அபிவிருத்திக்குரிய நிறைவான வேலைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. நிறைய அறிக்கைகள் மட்டும் எம்மிடம் உள்ளன.

எமது விடுதலைப் போராட்டம் என்பது அரசியல் ஒடுக்குமுறை, பண்பாட்டு ஒடுக்குமுறை மற்றும் பொருண்மிய ஒடுக்குமுறை, சமூக ஒடுக்குமுறை காரணமாகத்தான் உருவானது.

இன்று அரசியல் ரீதியான செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது - பொருண்மிய ரீதியான மேம்பாட்டுக்காக இன்று செயற்திட்டங்கள் நடத்தப்படுவதன் நோக்கம் என்ன?

எங்கள் அரசியல் இலக்குகளை புரிந்துகொண்ட உலகம் விபரீதமான முடிவைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக பொருண்மிய ரீதியான சுமைகளைக் குறைப்பதன் ஊடாக மனக்காயங்களை மாற்றலாமென்ற முடிவுடன் உலகம் வந்து நிற்கிறது.

எமக்கு கிடைக்கின்ற பணமும், திட்டங்களும் எமது அரசியல் இலக்குகளுக்கு குந்தகம் இல்லாமல் இருக்க வேண்டும்.

எமது மண்ணில் செயற்படுத்தும் திட்டங்கள் நல்ல முறையில் செயற்படுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் தமிழீழ திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் க.றஞ்சன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (அ)

## இறுதியாண்டு மாணவர்...

நெருக்குவாரங்கள், மாணவர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்ததையடுத்து மாணவர்கள் கல்வி கற்பதற்கான இயல்பான சூழல் இல்லை எனத் தெரிவித்து, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கல்விசார் செயற்பாடுகளை முற்றாக பகிஷ்கரித்திருந்தது.

இரண்டரை மாதங்களுக்கு மேலாகியும் பல்கலைக்கழக சூழலில் படையினரின் பிரசன்னம் தொடர்ந்தும் இருந்துவருகிறது.

பல்கலைக்கழக சூழலிலிருந்து படையினரின் பிரசன்னத்தை இயன்றளவு குறைத்து மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்கித் தருவதாக கல்வி அமைச்சு உறுதியளித்தபோதும் - இன்றுவரை அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாறாக படையினரின் பிரசன்னம் அதிகரித்து வருகிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி கற்பதற்கான சூழல் இல்லாத நிலையிலும் - இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சையைக் கருத்தில் கொண்டு அவர்களது விரிவுரைகள் உட்பட அனைத்து கல்விசார் நடவடிக்கைகளையும் எதிர்வரும் புதன்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளோம்.

படையினரின் பிரசன்னம் முற்றாக நீங்கி கல்வி கற்பதற்கான இயல்பு நிலை ஏற்பட்ட பின்னர் ஏனைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிக்க அரசாங்கம் விரும்பினால் பல்கலைக்கழக சூழலில் உள்ள படையினர் முற்றுமுழுதாக விலகிக்கொள்வதுடன், வளாக வீதியை படையினர் பயன்படுத்துவது முற்றாக நீக்கப்படவேண்டும்.

படையினர் வளாக வீதியைப் பயன்படுத்துவதாலேயே படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு பிரச்சினை உருவாகும் நிலை காணப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்றபோதும் பல்கலைக்கழக விடுதிகளில் 400 மாணவர்கள் மட்டும் தங்கக்கூடியதாக இருக்கிறது.

இதனால் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளில் தங்கியிருந்து கல்வி கற்க வேண்டியுள்ளது.

திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் காரைநகர், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களைச் சேர்ந்த மாணவர்களும் பல்கலைக்கழக சூழலில் உள்ள வீடுகளிலேயே தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றனர்.

ஆனால், பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தினர் தொடர்ந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதால் அந்தப் பகுதிகளில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் அச்சம் காரணமாக மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு வீடுகளை வழங்குவதற்கு அஞ்சுகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர்களில் அதிகளவானோர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பல்கலைககழக சூழலில் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு ஏற்ற சூழல் உருவாகும்வரை பல்கலைக்கழகத்தின் முழுமையான கல்விச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படமாட்டாது என மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த.அ)

## தலைமைப்...

நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

நோர்வே அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு எதுவித நன்மையும் வழங்கப்போவதில்லை.

நோர்வே அரசாங்கத்தின் மூலம் ஐரோப்பிய ஒன்றியத் தடையை விலக்கிக்கொள்ளும் வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகவே நாம் இதைக் கருதுகிறோம்.

இருப்பினும், இதனை ஒரு மாபெரும் வெற்றி என அரசாங்கமும் ஏனைய அரசியல் கட்சிகளும் தெரிவிப்பதும் - அதன் உள்ளார்ந்த திட்டத்தை உணராததும் கவலைக்குரிய விடயமாகும் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்தார். (01)

## ஜெனிவா...

இதில், போர்நிறுத்த உடன்பாட்டை தொடர்ந்து பேணுவது தொடர்பாக இரண்டு தரப்பும் இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து இந்தியா மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உயர்தர...

தற்கு இம்முறை பரீட்சையை 4 வாரங்களுக்கு பிற்போடவேண்டுமென பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளார்.

கடந்த வருட உயர்தரப் பரீட்சையின் இஸற் புள்ளி வழங்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருப்பதால், பரீட்சையைப் பிற்போடுவது தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார். (01)

## 1000 விக்கெட்டுக்களை...

முரளிதரன் நேற்று இந்த சாதனையை நிலைநாட்டினார்.

நேற்றைய போட்டியில் காலித் மசூத்தை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இவர் இந்த மைல்கல்லை எட்டினார்.

டெஸ்டில் 589ஆவது விக்கெட்டாக இவரை வீழ்த்தியதன் மூலமும், 411 ஒருநாள் போட்டி விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலமும் -

ஆயிரம் விக்கெட்டுக்களை வீழ்த்திய ஒரேயொரு வீரர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

நேற்றைய ஆட்டத்தில் முரளிதரன் 54 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தற்போது 593 டெஸ்ட் மற்றும் 411 ஒருநாள் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் - மொத்தம் 1004 விக்கெட்டுக்களைப் பெற்று முரளி உலகில் முதலிடத்தை வகிக்கிறார்.

ஷேன் வோன் 952 விக்கெட்டுக்களுடன் இரண்டாமிடத்திலும், 916 விக்கெட்டுக்களுடன் வசீம் அக்ரம் மூன்றாமிடத்திலும், 873 விக்கெட்டுக்களுடன் மக்ரா நான்காமிடத்திலும், கும்ளே 824 விக்கெட்டுக்களுடன் 5ஆம் இடத்திலும் உள்ளனர்.

நேற்றைய போட்டியிலும் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முரளி, 5 விக்கெட்டுக்களை ஒரு போட்டியில் 49ஆவது தடவையாக கைப்பற்றிய பெருமை கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாணயமாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | ரூ 102.00 | ரூ 103.03 |
| ஸ்ரேலிங் பவுண் | ரூ 177.95 | ரூ 180.78 |
| யூரோ | ரூ 121.00 | ரூ 123.27 |
| சுவிஸ் பிராங் | ரூ 77.11 | ரூ 79.02 |
| அவுஸ்ரேலிய டொலர் | ரூ 75.40 | ரூ 77.35 |
| ஜப்பானிய யென் | ரூ 00.88 | ரூ 00.89 |

மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள்

| | |
|---|---|
| பஹ்ரேன் டினாரின் சுட்டிய விலை | ரூ 272.07 |
| குவைத் டினாரின் சுட்டிய விலை | ரூ 351.17 |
| ஓமான் றியாலின் சுட்டிய விலை | ரூ 266.39 |
| சவுதி றியாலின் சுட்டிய விலை | ரூ 27.35 |
| ஐக்கிய அரபு ராச்சிய திர்ஹாமின் சுட்டிய விலை | ரூ 27.92 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## பொருளியல் - II பகுதி - I

### பிரிவு - "அ"

**அறிவுறுத்தல் :**
இப்பகுதியிலுள்ள "அ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் "ஆ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. (i) கிட்டிய பணமானது விரிந்த பணத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?
(ii) அண்மைக் காலங்களில் இலங்கையின் விரிந்த பண நிரம்பலில் போலிப்பணத்தின் போக்கினை ஆராய்க.
(iii) வட்டிவீத மாற்றத்துக்கு ஏற்ப பணத்துக்கான கேள்வி மாற்றமடையும். இதனை வரிப்படம் ஒன்றின் உதவியுடன் விளக்குக.

(5 × 3 = 15 புள்ளிகள்)

02. (i) வணிக வங்கி ஒன்றின் திரவச் சொத்துக்களை இனம் காண்க? அண்மைய ஆண்டுகளில் இச்சொத்து வீதம் எவ்வளவாக உள்ளது?
(3 புள்ளிகள்)
(ii) வணிக வங்கி ஒன்றின் மிகை ஒதுக்கு என்பதன் கருத்து யாது? பொருளாதாரத்தில் இதன் முக்கியத்துவம் யாது?
(4 புள்ளிகள்)
(iii) வணிக வங்கி ஒன்றின் சொத்து, பொறுப்பு தொடர்பான நிலைமை வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 2500 | கையிலுள்ள காசு | 200 |
| | | மத்திய வங்கியிலுள்ள காசு | 150 |
| | | வெளிநாட்டு நாணயம் | 50 |
| | | உண்டியல்கள் | 300 |
| | | ஆவணங்கள் | 400 |
| | | கடனும் முற்பணமும் | 1400 |
| | 2500 | | 2500 |

இங்கு வங்கி, வைப்புக்களில் 20 சதவீதத்தினை ஒதுக்காகப் பேணுகின்றது
(i) வணிக வங்கி வசமுள்ள காசு ஒதுக்கம் யாது?
(ii) வைப்புக்குத் தேவையான காசு ஒதுக்கம் யாது?
(iii) மிகை காசு ஒதுக்கம் யாது?
(iv) மேற்கொள்ளக்கூடிய கடன்களின் உச்ச அளவு யாது?
(2 × 4 = 8 புள்ளிகள்)

03. (i) புதிதாக மத்திய வங்கியினால் வரையறுக்கப்பட்ட குறிக்கோ‹ கள் எவை?
(ii) மத்திய வங்கியின் மீள் கொள்வனவுச் சந்தை என்பதன் கருத்தை விளக்குக.
(iii) இலங்கையின் நாணய உறுதிப்பாட்டினை வலுப்படுத்த மத்திய வங்கி எத்தகைய நடைமுறைகளை அறிமுகப்படுத்தியது?
(5 × 3 = 15 புள்ளிகள்)

04. (i) ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டினால் ஏற்படக்கூடிய சர்வதேச வர்த்தக நன்மையினை எவ்வாறு காட்டுவீர்?
(ii) கடந்த 25 வருடங்களில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுக.
(iii) இலங்கையின் இறக்குமதி கட்டமைப்பானது சுயமான உற்பத்திப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதாக ஏன் கூறப்படுகின்றது விளக்குக?
(5 × 3 = 15 புள்ளிகள்)

### பிரிவு - "ஆ"

05. (i) இலங்கையின் சனத்தொகையின் வயதமைப்பின் போக்கினை கடந்த 30 ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்க.
(5 புள்ளிகள்)
(ii) முதிர்ச்சியடையும் குடித்தொகையின் போக்கின் விளைவுகளை ஆராய்க.
(3 புள்ளிகள்)
(iii) ஊழியப்படை என்பதனை எவ்விதம் வரையறுக்கலாம்? இலங்கையில் தற்போது இதன் அளவீடு யாது?
(3 புள்ளிகள்)
(iv) அண்மைக் காலத்தில் இலங்கையின் வேலையின்மையின் போக்கினை ஆராய்க. (4 புள்ளிகள்)

06. (i) எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சி, வருடாந்த சராசரி பொருளாதார வளர்ச்சி என்பதனை விளக்குக.
(4 புள்ளிகள்)
(ii) இலங்கையின் அண்மைக்கால பொருளாதார வளர்ச்சிக்கு எத்தகைய விடயங்கள் காரணமாக அமைந்தன?
(4 புள்ளிகள்)
(iii) பொருளாதார வளர்ச்சியில் உட்கட்டமைப்புக்களும் திறன்களும் எவ்வாறு பங்காற்ற முடியும்?
(2 புள்ளிகள்)
(iv) பொருளாதார வளர்ச்சிக்கு உட்கட்டமைப்புக்கள் மாத்திரம் போதுமானதல்ல விளக்குக.
(5 புள்ளிகள்)

07. (i) பொருளாதார வளர்ச்சியானது பொருளாதார சமூக அபிவிருத்திக்கு போதுமான சூழலை ஏற்படுத்துமா? விளக்குக?
(ii) வளர்முக நாடுகளில் மக்களின் வறுமை நிலைக்கு பொருளாதார வளர்ச்சி உதவுவதில்லை என ஏன் கூறப்படுகின்றது?
(iii) ஒரு பொருள்ாதாரத்தின் வறுமையினை எவ்விதம் அளவிடலாம்.?
(5 × 3 = 15 புள்ளிகள்)

08. (i) அண்மைக்கால இலங்கை அரசின் பொருளாதாரக் கொள்கையின் குறிக்கோள்கள் யாவை?
(3 புள்ளிகள்)
(ii) அபிவிருத்தித் திட்டமிடலின் பிரதான நோக்கங்கள் யாவை?
(4 புள்ளிகள்)
(iii) பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை பேண எத்தகைய கொள்கைகளை பயன்படுத்த முடியும்?
(4 புள்ளிகள்)
(iv) விலைமட்ட உறுதிப்பாட்டினைப் பேணுதல் தொடர்பாக பொருளாதாரக் கொள்கையினை பயன்படுத்துவதிலுள்ள வரையறைகள் என்ன?
(4 புள்ளிகள்)

## பொருளியல் - II பகுதி - II

**அறிவுறுத்தல் :**
இப்பகுதி கட்டாயமாக 20 வினாக்களைக் கொண்டுள்ளது.
இப்பகுதிக்குரிய ஒவ்வொரு வினாவிற்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **40** புள்ளிகள் வழங்கப்படும்.
பலவினுள் தெரிவு வினாக்கள் தொடர்பில் நீங்கள் தெரிவு செய்த விடையின் கீழ் கோடிடுக.
சில வினாக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் கொண்டிருக்கும்.
ஏனைய வினாக்களுக்கான விடைகளை வினாவின கீழ் தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் எழுதுக.
எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும்.
இப் பகுதிகளுக்கும் விடையளித்த பின் பகுதி I பகுதி II ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கட்டி மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கவும்.

01. நாணயத்தளம் என்பதனை பணநிரம்பலுடன் தொடர்புபடுத்தும் சரியான கூற்று?
(i) பணநிரம்பலை பணப்பெருக்கியினால் வகுத்து நோக்கலாகும்.
(ii) மத்திய வங்கி, வணிக வங்கி என்பன கொண்டுள்ள சட்டமுறைப் பணமாகும்.
(iii) மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நாணயமாகும்.
(iv) பணப்பெருக்கியினை நாணயத்தளத்தினால் பெருக்குவதாகும்.

02. நவீன பொருளாதாரத்தில் பணத்தின் முக்கியத்துவத்தில் மிகச் சரியானது.
(i) தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்.
(ii) கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல்.
(iii) நவீன தொழிநுட்ப முன்னேற்றத்திற்கு ஏதுவாதல்.
(iv) பொருட்களையும் சேவைகளையும் பரிமாற்றம் செய்யும் ஊடகமாக தொழிற்படல்.

03. உம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத கூற்றினை இனம் காண்க.
(i) பணத்தின் திரவத்தன்மை பணத்துக்கான கேள்வியினை கருதும்.
(ii) மீள்நிதியிடல் வசதிகளை அதிகரித்தல் மத்திய வங்கியின் பண்புசார் கடன் கட்டுப்பாடாகும்.
(iii) வர்த்தக வங்கிகளின் வட்டி வீதங்கள் அதிகரிக்கும் போது கடன்பெறல் வீழ்ச்சியடைகின்றது.
(iv) அழைப்புப் பணம் வர்த்தக வங்கியின் திரவத்தன்மை வாய்ந்த சொத்தாகும்.

04. பணவீக்கத்தினை மிகச் சரியாக வரைவிலக்கணப்படுத்தும் கூற்று எது?
(i) பொருட்களின் விலை தொடர்ச்சியாக அதிகரித்தல்.
(ii) பொதுவிலைமட்டம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத்தரம் குறைதல்.
(iii) பொதுவிலைமட்டமானது நீண்டகால அடிப்படையில் தொடர்ச்சியாக அதிகரித்தலாகும்.
(iv) குறைந்தளவு பொருட்கள் கூடிய பணத்தினை துரத்திச் செல்லல்.

05. விரிந்த பணநிரம்பல் என்பதனை சரியாக வரைவிலக்கணப்படுத்தும் கூற்று எது?
(i) தாள், குற்றி நாணயங்கள்.
(ii) அரசு, வங்கி, பொதுமக்களிடமுள்ள புழக்கப்பணமும் கேள்வி வைப்பும்.
(iii) வணிக வங்கியின் வைப்புக்களும், தனியார் துறையினரின் வேறு தகைமை மற்றும் சேமிப்பு வைப்புக்களும்.
(iv) பொதுமக்களின் புழக்கப்பணம், கேள்வி வைப்பு மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளிலுள்ள சேமிப்பு, தவணை வைப்புக்கள்.

06. பின்வருவனவற்றில் சரியான கூற்றினை இனம் காண்க.
(i) பணவீக்க காலத்தில் பணச்சுற்றோட்ட வேகம் குறையும்.
(ii) பணவீக்கம் பணத்தின் பெறுமானத் திரட்டினைப் பாதிக்காது.
(iii) பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு கட்டாயமாக பொதுவிலைமட்டத்தினை அதிகரிக்கச் செய்யும்.
(iv) பணவீக்க காலத்தில் பணத்தின் சுற்றோட்ட வேகம் அதிகரிக்கும்.

07. பின்வரும் கூற்றுக்களில் தவறானது
(i) இலங்கையின் பணவீக்கத்தினை அளவிட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து உண்டு.
(ii) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்படும் பணவீக்கம் மிகச்சரியானது.
(iii) மொத்த விற்பனை விலைச்சுட்டெண் ஒரு உற்பத்தி செலவுச் சுட்டெண்ணாகும்.
(iv) பணவீக்கம் உற்பத்தியாளரை விட நுகர்வோரை அதிகம் பாதிக்கும்.

08. பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(i) ஒரு பொருளின் மீது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வையின் அளவு.
(ii) இறக்குமதித் தீர்வை முறையினால் ஏற்படுத்தப்படும் ஓர் உள்ளூர் கைத்தொழிலில் காணப்படும் கூட்டிய பெறுமதியின் அதிகரிப்பு வீதம்.
(iii) இளம் தொழில்களை பாதுகாப்பதற்காக இறக்குமதி மீது மேற்கொள் ளப்படும் கட்டுப்பாடுகள்.
(iv) இறக்குமதிப் பதிலீட்டினால் தொழில்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதி முடிவுப்பொருள் மீது விதிக்கப்படும் தீர்வையினால் உள்நாட்டு உற்பத்திப் பெறுமதியில் ஏற்படும் மாற்ற வீதம்.

09. சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பின் முக்கியத்துவம்.
(i) நாணயமாற்று வீதத்தினை உறுதிப்படுத்தல்.
(ii) சுங்கத் தீர்வையினைக் குறைத்தல்.
(iii) ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
(iv) உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை பாதுகாத்தல்.

10. சர்வதேச வர்த்தகத்தின் ஒப்பீட்டு நன்மை என்பது?
(i) குறித்த நாடு மற்றைய நாட்டினை விட குறைந்த செலவில் குறித்த பொருளை உற்பத்தி செய்தல்.
(ii) பண்டமொன்றுக்கான உற்பத்திக்கு ஏற்படும் மூலதனச் செலவு குறைவாக இருத்தல்.
(iii) மெய்வருமான மாற்றத்தின் அளவீடாகும்.
(iv) வெளிநாட்டு ஒதுக்குகளையும் பெறுமதியையும் தீர்மானித்தல்.

11. மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம், பெயரளவு பயனுறுதி நாணய மாற்று வீதத்திலும் கூடுதலான பெறுமானத்தை கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தை இனம் காண்க.
(i) குறித்த நாட்டின் பணவீக்கத்தை விட அதன் வர்த்தக வாடிக்கையாளர் நாடுகளின் பணவீக்கம் பெரிதாக இருத்தல்.
(ii) வர்த்தக வாடிக்கையாளர் நாடுகளின் பணவீக்கம் குறித்த நாட்டின்

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

பணவீக்கமும் பெரிதாக இருத்தல்.
(iii) குறித்த நாட்டின் பணவீக்கம் அதன் பிரதான வர்த்தக வாடிக்கையாளர் நாடுகளின் விலை வீக்கத்தை விட பெரிதாக இருக்கும் போது.
(iv) குறித்த நாட்டில் பணவீக்கம் இல்லாது இருக்கும் போது அதன் வர்த்தக வாடிக்கையாளர் நாடுகளில் பணவீக்கம் பெரிதாக இருக்கும் போது.

12. பின்வருவனவற்றில் சென்மதி நிலுவையின் திரண்ட நிலைமையினை எக்கூற்று புலப்படுத்தும்
(i) சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பாதகம்.
(ii) வணிக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு வீழ்ச்சி.
(iii) அலுவல்சார் தேறிய அந்நிய ஒதுக்கு வீழ்ச்சி.
(iv) சர்வதேச நாணய நிதியக்கடன்.

13. பின்வருவனவற்றில் தவறான கூற்றினை தெரிவு செய்க.
(i) சிசுமரண வீதம் குறைவதனால் சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்படலாம்.
(ii) பிறப்பு வீத வீழ்ச்சி காரணமாக பிள்ளைக் குடித்தொகை குறையலாம்.
(iii) பிறப்பு வீத வீழ்ச்சி காரணமாக வேலை செய்யும் வயதுப்பிரிவு சனத்தொகை குறையலாம் அல்லது உறுதியடையலாம்.
(iv) முதியோர் சனத்தொகையும், முதியோர் பருவத் தங்கி வாழ்வோர் வீதமும் எதிர்காலத்தில் குறையலாம்.

14. பொருளாதார வளர்ச்சி செய்முறையின் போது கைத்தொழில்மய நாடுகளில் விவசாயத்தின் ஒப்பீட்டு முக்கியத்துவம் குறைந்து செல்கின்றது. பொருத்தமற்ற காரணத்தினை இனம் காண்க.
(i) விவசாயத்துறையிலான தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
(ii) கைத்தொழில் உற்பத்தி அதிகரிப்பும் உற்பத்தித்திறன் அதிகரிப்பும்
(iii) விவசாயப் பொருட்களுக்கு உயர்ந்த வருமான மட்டத்தில் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி குறைவாக இருத்தல்.
(iv) உயர்ந்த வருமானத்தில் கைத்தொழில் பொருட்களுக்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி அதிகமாக இருத்தல்.

15. இலங்கையின் கினிக்குணகப் பெறுமதி 0.43 இலிருந்து 0.48 ஆக அதிகரித்தது. இதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(i) வறுமை தொடர்பாக அரசின் பரிகார நடவடிக்கை வெற்றியளித்துள்ளது.
(ii) பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றம் கண்டுள்ளது.
(iii) இலங்கையின் வருமான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்துள்ளன.
(iv) இலங்கையின் வருமான ஏற்றத் தாழ்வுகள் குறைந்துள்ளன.

16. கட்டமைப்பு சார் சீராக்கம் என்பதுடன் தொடர்புபடாத கூற்று எது?
(i) வரவு, செலவுத் திட்டப் பற்றாக் குறையினைக் குறைத்தல்.
(ii) பொருளாதாரத்தை தாராண்மைப்படுத்தல்.
(iii) அரச முயற்சிகளை தனியார் மயமாக்கல்.
(iv) பொருளாதாரத்தில் விலைக்கட்டுப்பாடுகளை உருவாக்கல்.

17. 2004 இல் இலங்கையின்
(அ) பொருளாதார வளர்ச்சி வீதம்.
(i) 5 - 6 (ii) 4 - 5 (iii) 3 - 4 (iv) 6 - 7

(ஆ) முதலீட்டு வீதம்.
(i) 19 (ii) 25 (iii) 26 (iv) 22

18. 2004 இல் இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு சேமிப்பு வீதங்கள் முறையே
(i) 12 - 3
(ii) 16 - 5
(iii) 18 - 8
(iv) 19 - 3

19. இலங்கையின் அபிவிருத்தித் திட்டமிடலின் பிரதான நோக்கம்.
(i) முதலீட்டுக்கு வாய்ப்பான சூழலைப் பேணல்.
(ii) பொருளாதார அமைப்பு சீராக்கல் கொள்கைகளை அமுல்படுத்தல்.
(iii) பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை, வறுமைக்குத் தீர்வு காணல்.
(iv) பொருளாதாரக் கொள்கை வடிவமைப்பு

20. இலங்கையில் தற்போது மதிப்பீடு செய்யப்பட்ட,
(அ) சனத்தொகைப் பருமன் (மில்).
**(i) 19 (ii) 20 (iii) 22 (iv) 21**

(ஆ) வேலையின்மை வீதம் (தொழிற்படையில்)
**(i) 8.0 (ii) 9.0 (iii) 10.0 (iv) 6.0**

**இ.இராஜேஸ்வரன்**
**B.Com (Spc.) PDED**
**Jaffna Central College**

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## பொதுச்சாதாரண பரீட்சை

1) இன்று உலகை உலுக்கிவரும் பறவைக்காய்ச்சல் 'நோயை ஏற்படுத்தும் கிருமியின் பெயர் என்ன?
1. சிசிரோ வைரஸ் 2. இன்புலுவென்ஸா வைரஸ்
3. வலன்சின் வைரஸ் 4. அந்திராக்ஸ் கிருமி

2) இவ்வருடம் தெற்காசிய விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
1. மாலைதீவு 2. இலங்கை
3. பாகிஸ்தான் 4. பங்களாதேஷ்

3) வீட்டோ அதிகாரத்தை பெறுதல் பொருட்டு ஐ.நா அமைப்பை விரிபுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கும் நாடுகளின் கூட்டம் எது?
1. இந்தியா, யப்பான், பிரேசில், ஜேர்மனி
2. இந்தியா, யப்பான், பிரேசில், சுவீடன்
3. யப்பான், பிரேசில், ஜேர்மனி, தென்னாபிரிக்கா
4. யப்பான், பிரேசில், சுவீடன், தென்னாபிரிக்கா

4) சூழல் மாசடைதல் சம்பந்தமாக நாடுகள் தாம் வெளியிடும் கழிவு வாயுக்களை கட்டுப்படுத்தல் தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற மாநாடு எவ்வாறு அழைக்கப்படும்?
1. சிலி மாநாடு 2. றியோடி ஜெனிரோ மாநாடு
3. பென்சிலேனியா மாநாடு 4. கியூடோ மாநாடு

5) 2006 ஆம் ஆண்டு முடிவடையும் ஐ.நாடுகள் சபை செயலாளர் தெரிவுக்கு இலங்கை சார்பாகப் போட்டியிட உள்ளவர்?
1. மங்கள சமரவீர 2. டி.யூ குணசேகர
3. ஜயந்த தனபால 4. பேனாட் குணதிலக.

6) அண்மையில் எந்நாட்டு அரசியை கொல்ல சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.
1. தைவான் 2. பர்மா 3. டென்மார்க் 4. பிலிப்பைன்ஸ்

7) 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட போட்டி யாது?
1. பெண்களுக்கான எல்லே 2. பெண்களுக்கான வாட்போர்
3. பெண்களுக்கான கால்பந்து 4. பெண்களுக்கான உயரம் பாய்தல்

8) இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவோர் எத்தனை பேர்?
1. 25 2. 24 3. 19 4. 29

9) இவ்வாண்டு மாசிமாதத்தில் இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலி களுக்கும் இடையில் நடைபெற்ற ஜெனிவா பேச்சுவார்த்தைக்கு அரச தரப்பில் தலைமை வகித்தவர்.
1. சமல் ராஜபக்ஷ 2. ரோகித போகொல்லாகம
3. நிமால் சிறிபால டி சில்வா 4. பேரியல் அஷ்ரப்.

10) இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு உள்ள இடம் எது?
1. காலி 2. மொறட்டுவ 3. பள்ளேகம 4. அம்பாந்தோட்டை

11) யூரோ நாணயத்தை ஐரோப்பிய கட்டமைப்பு அறிமுகப்படுத்திய ஆண்டு எது?
1. 1996 2. 1999 3. 2000 4. 1998

12) அண்மையில் எகிப்து கடல் பிராந்தியத்தில் ஆயிரம் பேரளவில் காவு கொண்ட கப்பல் எது?
1. அல் சலாமியா பொக்காசியோ 98
2. அல் பைகீரா ரொரண்ட் 84
3. அல் சலாம் கொக்லண்ட் 14
4. மேற்கூறிய எதுமில்லை

13) பாலஸ்தீனத்தில் அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையில் பெற்றிபெற்ற தீவிரவாத அமைப்பு எது?
1. முகாஜிதீன் 2. ஹமாஸ் 3. மாவோ 4. அல் அஜீரா

14) "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்ற கருத்தை வலியுறுத்திய அரசியலில் தந்தை எனப்படுபவர் யார்?
1. அரிஸ்ரோட்டில் 2. லான்ஸ் கபூர்
3. யசூசி அகாசி 4. ஆபிரகாம் லிங்கன்.

15) "நாட்டின் வரி அறவீடுகளை காலம் காலமாக அரசு மாற்றிய தன்மையில் பல வடிவங்களில் அறவீடு செய்து வருகின்றது" இவ்வாறு அறவீடு செய்து கொள்ள ஏற்பாடுகளைச் செய்வது எது?
1. பாராளுமன்ற நிலையியற் கட்டளையில்
2. ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்ட அறிக்கையில்
3. மகிந்தவின் சிந்தனையில்
4. திறைசேரியில்

16) சேது சமுத்திரத்திட்டத்தால் இந்தியாவுக்கு ஏற்படப்போகும் நன்மை அல்லாதது.
1. பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் இடையேயான கப்பற்பிரயாணத்தில் 36 மணிநேரம் குறைவடையும்.
2. தூத்துக்குடி துறைமுகம் விருத்தியடையும்
3. துறைமுகங்கள் மூலம் அன்னியச் செலவாணியை இந்தியா பெறும்.
4. கடலடித்தள மேடை மீன்பிடிகள் அப்பகுதியில் அதிகரிக்கும்.

17) அனல் மின்நிலையம் அமைப்பது தொடர்பாக அரசிற்கும், அந்தப்பகுதி மக்களுக்கும் இடையே தோன்றியுள்ள ஒருங்கிசைவற்ற தன்மையால் நிறுத் தப்பட்டுள்ளது. அவ்வமைவிடம் எது.
1. ஹற்றன் 2. நுரைச்சோலை 3. கந்தளாய் 4. அம்பாந்தோட்டை

18) இந்திய சிம்பொனி இசை கர்த்தாவான இளையராஜாவினால் இசையமைக் கப்பட்ட இந்துமத திரட்டு எது?
1. திருவிசைப்பா 2. திருப்பல்லாண்டு 3. திருவாசகம் 4. திருப்புராணம்.

19) "ஹரிப்பொட்டர்" கற்பனை திரைக் காவியத்தை தயாரித்தவர் யார்?
1. டேவிட் கிமென் 2. ஜோன் வில்லியம்ஸ்
3. கரீஸ் கொலம்பஸ் 4. ஸ்ரிங் கோல்விஸ்

20) அமெரிக்காவை கடந்த வருட இறுதியில் முதலில் தாக்கிய புயலின் பெயர் என்ன?
1. கதரினா 2. விஸ்மோ 3. நில்மா 4. எல்மோ

21) ஒரு வாகனத்தின் முன் சக்கரங்கள் 7 மீற்றர் சுற்றளவுடையன பின் சக்கரங்கள் 9 மீற்றர் சுற்றளவுடையன. முன் சக்கரங்கள் பின் சக்கரங்களைவிட 10 சுற்றுக்கள் மேலதிகமாகச் சுற்றியிருப்பின் வாகனம் சென்ற தூரம் யாது?
1. 330M 2. 318 M 3. 340 M 4. 315M

22) கமலனுக்கு ஜன்னலொன்று தீந்தை அடிக்க 2 மணித்தியாலங்கள் தேவைப் படுகின்றன. ராஜனுக்கு அதே ஜன்னலுக்கு தீந்தை பூச 3 மணிநேரம் தேவைப்படுகின்றன. எனின் இருவரும் சேர்ந்து தீந்தை அடிக்க எவ்வளவு நேரம் தேவை?
1. 2 மணி 2. 11/2 மணி 3. 5மணி 4. 3 மணி

23) 300 மீற்றர் என மதிப்பிடப்பட்ட தூரத்தை உண்மையாக அளந்தபோது 290 மீற்றராக இருந்தது. எனவே மதிப்பீட்டின் தவறு எத்தனை வீதமாகும்.
1. 6 வீதம் 2. 3 வீதம் 3. 3.44 வீதம் 4. 6.8 வீதம்

24) ஒரு கனவடிவத்தின் ஓரங்களின் கூட்டுத்தொகை 48 சென்றிமீற்றர் ஆயின் அக்கனவடிவத்தின் கனவளவு எவ்வளவு?
1. 96 கன செ.மீ 2. 64 கன செ.மீ
3. 72 கன செ.மீ 4. 48 கன செ.மீ

25) 7 மனிதர்களுக்கு இரு நாட்களுக்கு 15 ரின் மீன்கள் தேவை. 4 மனிதர்களுக்கு 7 நாட்களுக்கு எத்தனை ரின் மீன்கள் தேவைப்படும்.
1. 49 2. 30 3. 14 4. 15

**செல்வநாயகம் அருட்குமரன்**
**B.FA,Dip.in.com**